# மாரியம்மன் மான்மியம்



ஆசிரியர்:
ஆ. சபாபதி
(பண்டிதர். கவிராசகேசரி)

தாமரைக் கேணி,
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

470 549 168

# மாரியம்மன் மான்மியம்

பல நூல்களிலிருந்து திரட்டி எழுதப்பட்டது.

University of Peradeniya
04 JAN 2022
LIBRARY

★

S. THILLAINATHAN
Dept. of Tamil
University of Sri Lanka
PERADENIYA.

ஆசிரியர்:
**ஆ. சபாபதி**
(பண்டிதர். கவிராசகேசரி)

தாமரைக்கேணி, மட்டுநகர்.

★

704807
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் எழுதிய நூல்கள்:

விடுதலை வேட்கை (சிறுகாவியம்), காமசுந்தரி (காவியநூல்) வசந்த காவியம், கதிர்காம முருகன் மேற்குயில் விடுதூது, நசிகேத உபாக்கியானம் (கடோப நிடதத் தமிழாக்கம்) என்னும் செய்யுள் நூல்களும்,
பல சிறு நூல்களும், கட்டுரைகளும்.

ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம் — நாவலப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
04 JAN 2022
LIBRARY

# முன்னுரை

தென்னிந்தியாவிலும், ஈழத்திலும் தமிழர் வதியும் இடங்கள் தோறும் மாரியம்மன் கோயில்கள் இருக்கின்றன. மாரியம்மன் கோயில்கள் பல கிராமப்புறங்களிலே அமைந்திருக்கின்றன. இக்கோயில்களிலே வருடத்துக்கு ஒருமுறை விழா நடைபெறுகிற கோயில்களே அதிகமாக விருக்கின்றன. இவ்விழாக்கள் ஆனிமாதம் பூரணைக்கு முன் ஒரு வாரம் வரையில் நடைபெற்றுப் பூரணை நாளன்று முடிவுறுகின்றன. பல கோயில்களிலே தினந்தோறும் ஆராதனையும் வருடத்துக்கு ஒருமுறை விழாவும் நடைபெறுகின்றன. மாரியம்மன் சக்தியின் அவதாரம் என்றும், சக்தியே மாரியம்மன் என்றும் நம்மவர்களில் பலரிடையே நம்பிக்கை நிலவி வருகிறது. ஆனால் சக்தி எவ்வாறு மாரியம்மனாக மாறினாள் என்ற வரலாறு வரன்முறையாக இதுவரை எழுதப்பட்டிருக்கவில்லை.

மாரியம்மன் வைசூரி, அம்மை நோய் முதலியவற்றை நீக்கும் தெய்வம் என்றும், மழையைப் பொழியப்பண்ணும் தெய்வம் என்றும் கன்னிப் பெண்கள் வழிபட்டால் அவர்களுக்கு தாங்கள் விரும்பியவிதம் கணவரையடைய உதவி செய்யும் தெய்வம் என்றும், புத்திர பாக்கியம் அற்றவர்கள் வழிபட்டால் அவர்களுக்கு மக்களையுதவும் தெய்வம் என்றும், செல்வத்தையும் சுகத்தையும் வழிபடுவோர்க்கு வழங்கும் தெய்வமென்றும் பண்டு தொட்ட நம்பிக்கை நம்மவர் பலரிடமிருந்து வருகிறது.

மாரியம்மன் அகவல், மாரியம்மன் பதிகம், மாரியம்மன் உற்பத்தி, மாரியம்மன் குளுத்தி, என்ற தலைப்புகளிலே பல சிறிய நூல்கள் வெளிவந்திருக்கின்றன. இவை கோயில்களிலே பாடப்படுகின்றன.

மாரியம்மன் கோயிலைச் சுற்றிப் பல சிறு சிறு கோயில்கள் வயிரவன், வீரபத்திரன், சிங்கநாத வயிரவன், அகோரவீரபத்திரன், ஐயனர், (என்னும் அரிகரன்) காளி, அகோரமாகாளி, பேச்சியம்மன், துர்க்கையம்மன் என்னும் பல தெய்வங்களுக்கென ஆக்கப்பட்டிருக்கின்றன. அவ்விதம் சிறு தெய்வங்களுக்கு நிலையான கோயில்கள் இல்லாத இடங்களிலே விழா நாட்களிலே தற்காலிக கோயில்கள் உண்டாக்கவும் படுகின்றன.

704807

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமங்களிலே, விழா நடக்கும் நாட்களிலே பேய்பிடித்து ஆடுகிறவர்கள் கோயிலுக்கு வருகிறவர்களுக்குக் "கட்டுரை"ப்பார்கள். சிலர் கசையடி தரும்படி கேட்டு வாங்குவார்கள். விழா முடிவதற்கு முதல் நாள் கோயில்களிலே பாற் பொங்கல் பொங்கிப் பெண்குழந்தைகளுக்கு உணவளிக்கப்படும். அதன்பின் மற்றவர்களுக்கும் பாற்சாதம் கொடுக்கப்படும். இவற்றின்பின் பேயாடுகிறவர்களுக்கு உறட்டி, பழம், பூ முதலிய வைத்து "மடை"ப்பலியும், சில இடங்களில் சேவல், ஆட்டுக்கடா முதலிய உயிர்ப்பலியும் கொடுக்கப்படும். அதன்பின் நீராட்டு நடைபெற்று விழா முடியும். இவ்வித சடங்குகள் இடத்துக்கிடம் மாற்றம் பெறும். மந்திரவாதிகளே இக்கோயில்களின் குருக்கள் வேலை பார்ப்பார்கள். பல கோயில்களிலே சைவக் குருக்கள்மாரும், பிராமணக் குருக்கள்மாரும்பூசகராயிருப்பார்கள்.

முன்னர் கூறப்பட்ட மாரியம்மன் காவியம், அகவல், குளுத்தி என்னும் சிறிய நூல்கள் இதுவரை வெளிவந்த தமிழ் வரலாறுகள் எவற்றிலும் காணப்படவில்லை. இவற்றின் நடை மிகவும் பிற்காலத்ததாகக் காணப்படுகிறது. எனவே இவை செவியேறலாக வந்த செய்திகளைக்கொண்டு எழுதப்பட்டன என்று யூகிக்க இடம் இருக்கிறது. இவற்றிலே பக்தி நிறைந்த பல அரிய பாடல்கள் உள்ளன.

முதியோர் பலரிடம் மாரியம்மன் வரலாறு பற்றிக் கேட்டபோதும், பூசாரிமாரிடம் கேட்டபோதும் அவர்கள் கர்ண பரம்பரையான பல கதைகளை இடத்துக்கிடம் வேறுபட எனக்குக் கூறினார்கள். மேலே கூறிய மாரியம்மன் அகவல், காவியம், குளுத்தி, உற்பத்தி என்பவற்றை ஆராய்ந்தபோது அவை கண்ணகி வரலாற்றுடன் இடையிடையே தொடர்புடையனவாக இருப்பது தெரிந்தது.

இற்றைக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன் வடமொழி விநாயகபுராண மொழிபெயர்ப்பைப் படித்துக் கொண்டிருந்தபோது அதிலே சிவபெருமான் இரேணுகையை நோக்கி "நீ சக்தியின் அம்சம், கிராமதெய்வமாகித் தென்னாட்டுக்குச் சென்று மக்களுடைய நோய்களையகற்றி அவர்களுக்கு உதவி செய்" என்ற பகுதி எனக்கு ஊக்கம் தந்தது. எனவே பல நூல்களிலே கிடைத்த சிறு, சிறு குறிப்புகளைக் கோவை செய்து இவ்வரலாற்றை எழுத முற்பட்டேன். நூல்களிடையே உள்ள கதைகள் எல்லாவற்றிலும் பரசுராமன் கூறப்படுகின்றான். பரசுராமனுடைய தாயாக இரேணுகை காணப்படுகிறாள். இரேணுகையே மாரியம்மனாக மாறினாள் என்னும் முடிபுள்ள கதைகள் இவ்வரலாற்றை எழுத உதவி புரிந்தன.

மாரியம்மன் வரலாற்றுடன் தொடர்புடைய நீலவிழிப்பாண்டியன் கதை, பாண்டியன் நெடுஞ்செழியன் மகளாக மாரியம்மை அவதரித்துக் கண்ணகியாக மாறிய கதை, பரசுராமன் வரலாறு, காத்தவராயன் கதை, தொட்டியத்துச் சின்னான் கதை, பரசுராமன் காசிபருக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானம் வழங்கிய கதை என்பவற்றை அனுபந்தமாக்கிச் சேர்க்க எண்ணி னேன். அப்படிச் சேர்த்தால் புத்தகத்தின் அளவும் இரட்டிப்பாகிவிடும் என்ற எண்ணத்தினால் அவ்வெண்ணத்தை ஒதுக்கிவிட்டேன்.

தமிழ் மக்கள் இந்நூலை வரவேற்பார்களாயின், முன்கூறியமற்ற வரலாறுகளைத் தனித்தோ அல்லது இதன் மறுபதிப்புடன் அநுபந்தமாகச் சேர்த்தோ வெளியிடவிருக்கிறேன்.

இந்நூல் சிறியது. ஆனால் இதை ஆராய்ந்து முடித்த உழைப்பு மிகப் பெரியது. ஆயினும் பேரறிஞர்கள் ஆதாரத்துடன் தருகிற ஆலோசனைகளை நன்றியுடன் வரவேற்று நிற்கிறேன்.

இவ்வரலாற்றுக்குரிய ஆதாரபூர்வமான செய்திகளைப் பல நூல்களிலிருந்து ஆராய்ந்தபோது, உடனிருந்து அவற்றைப் படித்தும், எழுதியும், ஆலோசனை கூறியும் உதவிபுரிந்தவரும், இளைப்பாறிய அரசினர் வைத்தியரும் எனது மைத்துனியாருடைய செல்வ மகனுமான டாக்டர் சிவசோமசுந்தரனுருக்கும், இதைத் தட்டச்சில் எடுத்து உதவி செய்த எனது மகள் முறையான திருநிறை செல்வி: க. அரியமலருக்கும் மனமார்ந்த நன்றி பாராட்டி முடிக்கிறேன்.

— ஆ. சபாபதி

தாமரைக்கேணி,
மட்டுநகர்.
1-11-1972.

University of Peradeniya
04 JAN 2022
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணைக்கு உதவிய நூல்கள்

1. வடமொழி வியாசபாரத மொழிபெயர்ப்பு
2. வடமொழி வால்மீகி இராமாயண மொழிபெயர்ப்பு
3. இந்திமொழி துளசி இராமாயண மொழிபெயர்ப்பு
4. வடமொழிச் சிவபுராணம், விநாயகபுராணம், மச்சபுராணம், சூரியபுராணம், வராகபுராணம், கூர்மபுராணம், இலிங்கபுராணம், விஷ்ணுபுராணம், பாகவதம் என்பவத்தின் தமிழாக்கம்.
5. வில்லிபாரதமும், பாரதவசனமும்.
6. கம்பராமாயணம்
7. தமிழ் மச்சபுராணம், கூர்மபுராணம், விஷ்ணுபுராணம்
8. கந்தபுராணத்தின் ஏழாவது காண்டமாகிய உபதேசகாண்டம்
9. காஞ்சிப்புராணம்
10. மாரியம்மன் காவியம், மாரியம்மன் அகவல், மாரியம்மன் குளுத்தி, மாரியம்மன் உற்பத்தி முதலியன;
11. கிராமப்புறக் கதைகளும், கட்டுரைகளும், மந்திரங்களும்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சென்ற ஆடி மாதத்தில் மட்டக்களப்பு தாமரைக் கேணியைச் சேர்ந்த பண்டிதர் ஆ. சபாபதி என்பவரிட மிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் என்னைத் தாம் சந் திக்க விரும்புவதாகவும், தான் நாவலப்பிட்டிக்கு வந்து சந்திக்க முடியாத நிலையில் இருப்பதாகவும் கடிதத்தில் கண்டிருந்தது. கடிதத்தைப் பார்த்ததும் அவரைச் சென்று பார்க்க வேண்டுமென ஒரு உள் தூண்டுதல் எழுந்தது. ஆவணி மாதத்தில் காரைதீவில் மகாசமாதி அடைந்திருக் கும் சித்தானைக்குட்டிச் சுவாமிகளின் குருபூஜைக்குச் செல் லும் வாய்ப்புக் கிடைத்தது.

செல்லும் வழியில் தாமரைக்கேணியில் அன்பர் அவர்க ளைச் சந்திக்கச் சென்றேன். அங்கு ஒரு கல்விக்கடலைச் சந்திக்கும் பேறு பெற்றேன். இருபது மணித்தியாலங்கள் அவருடன் இருக்கும் பேறு கிடைத்தது. இருபது ஆண்டு கள் வருந்திக் கற்று அறிய வேண்டிய விஷயங்களை இருபது மணித்தியாலங்களில் அறியும் வாய்ப்பைப் பெற்றேன். இத்தகைய ஒரு சந்தர்ப்பம் என் வாழ்நாளில் மறக்க முடியாத ஒன்ருகும்.

பண்டிதர் அவர்கள் இருந்த இருக்கையில் இருந்து கொண்டே பல ஆராய்ச்சிகள் செய்துள்ளதை அறிந்தேன். அவரது வீடு ஒரு பல்கலைக்கழக வாசிகசாலையாக இருந் தது. ''மாரியம்மன் மான்மியம்'' என்ற நூலின் தட்டெ ழுத்துப் பிரதியை எனது கையிலே அளித்து இதனை அச் சிலே பார்க்க விரும்புவதாக மிக அடக்க ஒடுக்கத்துடன் கூறினர்கள். அது 'ஆத்மஜோதி அச்சக'த்திலிருந்து வெளி வருவது பெரும்பேறெனக் கூறினர்கள். ஒரு அறிஞருடைய ஆத்ம திருப்திக்காக அதனைச் செய்ய வேண்டும் என்று அதனைப் பெற்றுக் கொண்டேன். நூலை எப்பொழுது தொடங்குவது என்று எனதுள்ளத்திலே ஒரு போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

கடுதாசி வாங்கப் பேமிற் கிடைக்க வேண்டும். பேமிற் கிடைத்ததும் கடுதாசி வாங்கப் பணம் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதர் அவர்களுடைய அன்பு மகள் திருமதி. முத்துலட்சுமி கணேசலிங்கம் அவர்கள் நூல் வெளியீட்டிற்கு உதவியதாகப் பண்டிதர் அவர்கள் ஆயிரம் ரூபா காசுக்கட்டளை மூலம் அனுப்பியிருந்தார்கள். பணமும் கடுதாசிப் பேமிற்றும் ஒரேநேரத்தில் வந்து சேர்ந்தன. உடனே வேலை தொடங்கப்பட்டது. முதல் பதினறு பக்கங்களையும் பார்வையிட்ட பண்டிதர் அவர்கள் அச்சு வேலையில் திருப்தி காட்டிக் கடிதம் வரைந்திருந்தார்கள். அடுத்த பதினறு பக்கம் தயாராகிக் கொண்டிருந்தது.

27–10–72 வெள்ளி மாலை நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்பாள் தரிசனம் முடித்து வீடு வந்து சேர்ந்தபோது வீட்டிலிருந்த பையன் தந்தி ஒன்றைக் கொண்டுவந்து தந்தான். தந்தியை உடைத்து வாசித்தேன். பண்டிதர் சபாபதி இறந்து விட்டதாக அவரது அன்பு மகள் முத்துலட்சுமி அறிவித்திருந்தார்கள். தந்தியில் எழுதப்பட்ட வசனங்களை என்னல் நம்ப முடியாது மரம்போல் இருந்தேன். தந்தி பொய்யாக இருக்கக்கூடாதா என்று ஒரு சிறு ஆசை. வானெலியில் இரவு 9 மணிச் செய்தியின்பின் பண்டிதர் அவர்களுடைய மரணச் செய்தியைக் கேட்டு மரணத்தைப் பற்றிய செய்தியை உறுதிப்படுத்திக் கொண்டேன்.

பண்டிதர் அவர்கள் ஒரு எழுத்தாளர் மட்டுமல்ல; அவர் ஒரு கவிஞருமாவார். அவரது கவித்துவத்தை அறிந்த தொண்டை மண்டல ஆதீனம் அவர்கள் ''கவிராசகேசரி'' என்ற பட்டத்தை அளித்துக் கௌரவித்தார்கள். பண்டிதர் அவர்களுடைய பூதவுடல் மறைந்தாலும் அவரது ஆத்மா இந்த நூல் மூலம் பேசிக்கொண்டிருக்கிறது என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. இந்த நூல் பண்டிதர் அவர்களை எக்காலத்தும் மறவாமல் இருக்கச் செய்யும் ஒரு ஞாபகச் சின்னமாக விளங்கும் என்பது எனது நம்பிக்கை.

பண்டிதருடைய ஆத்மா சாந்தி அடையப்
பிரார்த்திப்போமாக!

ஆத்மஜோதி, நா. முத்தையா
நாவலப்பிட்டி.
1–11–72.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புக் காணிக்கை!

"மாரியம்மன் மான்மியம்"

என்னும் இந்நூல் ஆசிரியர்

பண்டிதர். 'கவிராசகேசரி'

திரு. ஆ. சபாபதி அவர்கள்

27-10-72ல் பரமபதம் அடைந்தார்கள்.

—அவர்களின்—

அன்புக் காணிக்கையாக,

நினைவாக

இந்நூலைச் சமர்ப்பிக்கின்றோம்!

வெளியீடு:

ஆத்மஜோதி நிலையம்,

நாவலப்பிட்டி.

1972.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரியம்மன் மான்மியம்

## அட்டவணை


1. இரேணுகைப் படலம் — — 1
   சமதக்கினி
   இரேணுகை
   பரசுராமன் பிறப்பு
2. கார்த்தவீரியப் படலம் — — 12
3. மாரியம்மன் வருபடலம் — — 31
4. பரசிராமன் தவஞ் செய்த படலம் — — 37
5. மாரியம்மன் வரம் பெறு படலம் — — 45
6. பரசிராமன் பெற்ருேருக்கு அந்தியக் கிரியைகள் செய்த படலம் — — 49
7. மாரியம்மன் உலாவியற் படலம் — — 51


★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரியம்மன் வரலாறு

## காப்பு

(நேரிசை வெண்பா)

மாரியம்மன் காதை வரன்முறையாய்க் கோவைசெயப்
பேரருளை நல்கும் பிறைக்கோட்டு—வீரகத்திப்
பிள்ளையார் என்ற பெயரோடு தேன்நகரி
னுள்ளுறையும் முன்னோ னுவந்து.

(கட்டளைக் கலித்துறை)

நின்னருங் காதையைக் கோவைசெய் தன்பர் நிதம்பரவ
வின்னருள் தந்தருள் கஞ்சத் தடத்திடை யேயுறையு
மன்னமே மாரியா மம்மையே யீச ரருகிலுறை
மின்னிடை வானமிர் தேயுல கோம்பிடு மெல்லியலே.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்முகம்

மாரியம்மன் வரலாற்றை அறிவதற்கு அம்மன் வாழ்ந்த இடங்கள், அக்காலச் சூழ்நிலைகள் அக்காலத்தில் வாழ்ந்தவர்கள் பற்றிய சிறு குறிப்புகளை அறிதல் நன்று. மாரியம்மனுடைய வரலாறு தோன்றுவதற்கு முன் வட இந்தியாவிலே ஆரியர்கள் குடியேறிவிட்டனர். தெற்கிலிருந்த தமிழர்களும் தங்களுடைய குடியேற்றத்தையும் அரசியலையும் சிந்து நதிபாயும் பஞ்சாப் தேசம் வரையில் கொண்டு போயினர். இதனால் தென்னாட்டவர்களுக்கும் வடநாட்டவர்களுக்கும் பிணக்குகளும் பெரும் போர்களும் நடந்தன. வடநாட்டவர்களும் கடல்கொண்ட தென்னாடுவரையும் சென்றுவிட்டனர். கடற் கோள்களின் பின்பும் குமரிமுனை வரையில் உள்ள தென்னாடுகள் எல்லாவற்றிலும் வடநாட்டவர்கள் வசித்தனர். காலஞ் செல்லச் செல்ல வடநாட்டுக்குச் சென்ற தென்னாட்டவர் வடநாட்டவருடன் கலந்தனர். அதே போலத் தென்னாட்டுக்கு வந்த வடநாட்டவரும் தென்னாட்டவருடன் கலந்தனர்.

சரித்திரத்துக்கு எட்டாத மிகப் பழங்காலத்திலே, மத்திய ஆசியாவில் குடியிருந்து அதன் நாற்றிசையிலும் விரிந்து சென்ற ஆரியரின் ஒருபகுதியார் ஆபுகாஸ்தானத்துக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள கைபர் கணவாய் வழியாக இந்தியாவின் வடமேற்குப் பாகத்திலே குடியேறினர். காலவரையிலே அவர்கள் சிந்துநதிப் பகுதிகளிலிருந்து கங்கை நதி பாயும் கிழக்குச் சமவெளிகளையும் அடிப்படுத்தி அரசாண்டனர். இக்காலத்திலேதான் தென்திசையிலிருந்த கருநிற மக்கள் வடக்கிலே குடியேறினார்கள். இது முன்னரே கூறப்பட்டது. ஆரியருடைய மொழியைப் பிராகிருதம் என்பர். அக்காலத்திலே இந்த மொழி எழுத்து வழக்கில் இல்லாது பேச்சுவழக்கில் மட்டும் இருந்தது. அவர்கள், மித்திரன், வருணன், சூரியன், இந்திரன், சோமன் என்ற பல தெய்வங்களை வழிபட்டனர். தங்களுடைய நிலங்கள் செழிக்க வேண்டும் என்றும், மந்தைகள் வளர வேண்டும் என்றும் தங்களுடைய பகைவர்கள் அழியவேண்டும் என்றும் இவைபோன்ற பல வேண்டுதல்களை அவர்கள் தேவதைகளை நோக்கி உருக்கமான பாடல்களாகப் பாடி வந்தனர். தேவர்களுக்குப் பலி செலுத்தினால் அவர்கள் தங்களுக்கு அருள் பொழிவார்கள் என்று நம்பினர். இந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலிகளே பிற்காலத்தில் வேள்விகள் என்றும் யாகங்கள் என்றும் அழைக்கப்பட்டன. சோமவதை என்னும் கொடியை இடித்துப் பிழிந்து அதை பாத்திரங்களில் விட்டுப் புளிப்பேற்றிய பின் அதனைச் சோமபானம் என அழைத்து யாகங்களிலே தேவர்களுக்குப் பானமாக வைத்துப் பூசித்தனர். இவர்கள் பாடி வழிபட்ட பாடல்கள் எல்லாம் செவியேறலாகப் பல ஆண்டுகள் படிக்கப்பட்டு வந்தன. அழகிய இனிய தெய்வீகப் பாடல்களாகிய இவைகளே வேதபாடங்கள் என்று அழைக்கப்பட்டன. பிராகிருத மொழி திருந்திவர அது ஆரியம் என அழைக்கப்பட்டது. அதைப் பாணினி முனிவர் திருத்தி, எழுதவும் பேசவும் கூடியதாக இலக்கணம் வகுத்தார். அதன்பின் அம்மொழி சமஸ்கிருதம் எனப்பட்டது. சமஸ்கிருதம் என்றால் திருத்தப் பட்ட மொழி என்று பொருள்படும்.

ஆரியருடைய பாடல்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கிய நூல் 'இருக்குவேதம்' எனப்பட்டது. அறவிறந்த இத்தெய்வீகப் பாடல்களில் இனிமையாகப் பாடக்கூடியவற்றைத் தெரிந்து சாமவேதம் என்றும் மற்றவற்றை யசுர் வேதம் என்றும் வகுத்தனர். ஆகப் பிந்திய பாடல்கள் அதர்வண வேதம் என அழைக்கப்பட்டது. இவ்விதம் பிரித்தவர் வேதவியாசர் எனப்பட்டார். வேதங்களின் உட்பிரிவுகளாகப் பிராம்மணங்களும் ஆரணியகங்களும் அமைந்திருந்தன. அவற்றைத் தொடர்ந்து ஞான உபதேசத்தை உணர்த்தும் பக்திப் பாடல்கள் சேர்க்கப்பட்டன. இவற்றை உபநிடதங்கள் என அழைத்தனர். வேத உபநிடதங்கள் ஆக்கப்பட்ட பின் வடவர் தென்னவர்களுடைய கலப்பு அதிகமாயிற்று. அக்காலத்திலே வடநாட்டுத் தெய்வங்களும் தென்னாட்டுத் தெய்வங்களும் ஒன்றே என்ற கருத்து ஏற்பட்டது. இதனால் புராணங்கள் எழுதப்பட்டன. புராணங்கள் பதினெட்டு. இவை சிவனையும் விட்டுணுவையும் பெருங்கடவுளராக வைத்து எழுதப்பட்டவை. பின்னர் உபபுராணங்களும் அதன் பின்னர் தலபுராணங்களும் எழுந்தன. இப்புராணங்களே உலகங்கள் படைக்கப்பட்டது முதல் பின் நிகழ்ந்த சங்கதிகளையும் குறிப்பிட்டன. புராணங்களைப் புராதன கதைகள் என்று சொல்வார்கள். புராணங்களே சிவன் விட்டுணு முதல் பலதெய்வங்களுடைய சங்கதிகள் எல்லாவற்றையும் வெளிப்படுத்தின. ஒரு புராணத்திலே யுள்ள கதை மற்ற புராணங்களிடையும் வந்திருக்கிறது. பெரும்பாலும் பருப் பொருள்கள் ஒரு விதமாகவும் நுண்பொருள்கள் ஒரு விதமாகவும் மாறுதல்களுடனும் புராணங்களிலே யிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணங்கள் ஒரு புறத்தில் வளர்ந்தன. மற்றொரு புறத்திலே இரண்டு பெரிய இதிகாசங்கள் எழுந்தன. இதிகாசங்கள் இரண்டும் வீர காவியங்கள். பிறநாட்டவர்களுடைய நெருக்கத்திலே ஆரியவர்க்கம் அல்லலுற்ற போது ஆரியர்களுக்கு வீரத்தை உணர்த்தவும் அதனுல் பகைவரை எதிர்த்துத் துரத்தவும் வேண்டித் தேசாபிமானம் நிறைந்த வால்மீகி, வியாசர் என்பவர்கள் இவற்றை இயற்றினர் என்று கூறுதலும் தகும். இதிகாசங்களில் முந்தியது இராமாயணம், அயோத்தியிலிருந்து அரசு புரிந்த அரசர்களையும் அவர்கள் வரலாறுகளையும் இது கூறும். அயோத்தி நகரம் கங்கை நதிக்கு வடக்கே ஆரியவர்க்கத்தின் கிழக்குப் பகுதியிலே இருந்தது. இதை மொகலாயர் பிடித்தபின் இதன் பெயர் மாற்றப்பட்டு இன்று பைசாபாத் (Fiyzabad) என்று அழைக்கப்படுகிறது. பாரத மகா காவியம் அத்தினபுரம் இந்திரப் பிரஸ்தம் என்னும் இடத்து அரசர்களின் வரலாறுகளைக் கூறும் இவ்விரு நகரங்களும் அயோத்திக்கு மேற்கே ஏறக்குறைய ஆயிரம் மைல் தூரத்திலே கங்கையின் வடகரையிலே இருந்தன. இந்திரப் பிரஸ்தம் இப்பொழுது புதுடில்லி என்றழைக்கப்படுகிறது.

இவ்விரண்டு இதிகாசங்களிலும் கிளைக் கதைகள் பல உண்டு. இக்கதைகளிற் பல, புராணங்களில் இருக்கின்றன. மகாபாரதத்திலே, புராணக் கதைகள் எண்பது வீதம் அளவில் இருக்கின்றன. இந்தப்பாரிய இதிகாசம் உலகிலே உள்ள இதிகாசங்களிலும் புராணங்களிலும் பார்க்க மிக நீண்டது. ஹோமர் என்னும் கிரேக்க ஞானி இலியட் என்னும் காவியத்தை எழுதினர். அதுவே மேலைத்தேசத்தவர் கண்ட மிக நீண்ட பெருங்காவியம் — ஆனல் பாரத காவியமோ இலியட் காவியத்திலும் பார்க்க மூன்று மடங்கு நீண்டது. இது வடமொழியிலே இரண்டு லட்சம் கிரந்தங்களால் ஆக்கப்பட்டது. புராணங்கள் பலவும் இதிகாச காவியங்களும் இந்திய மொழிகள் எல்லாவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.

நாம் மேலே கூறியபடி புராண கதைகள் பல புராணங்களிலே சில வேறுபாடுகளுடன் கூறப்பட்டன என்று கண்டோம். இவற்றுள் மாரியம்மனுக்கென்று தனித்த கதை எங்கணும் கூறப்படவில்லை. மாரியம்மனுடைய வரலாற்ருேடு சம்பந்தமுடைய சமதக்கினி முனிவர், வால்மீகி முனிவர், தத்தாத்திரேய முனிவர், உலகப் புகழ்பெற்ற வீரனுகிய கார்த்தவீரியார்ச்சுனன், பரசுராமன் முதலியவர்களுடைய சரிதங்களை புராணங்கள் எல்லாவற்றிலும், இதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசங்களிரண்டிலும் காண முடிகிறது. சமதக்கினி முனிவருடைய அடிச்சுவடு யசுர், சாம வேதங்களிடையே காணப்படுகிறது.

மேலே கூறப்பட்டவர்களுடைய வரலாறுகளுடன் ஒட்டி மாரியம்மன் வரலாறு சிறிது சிறிதாக வருகிறது. இவை எல்லாவற்றையும் ஒருங்கு திரட்டிக் கோவை செய்ததே எனது ஆறு வருட வேலையாகும். இனி,

மாரியம்மன் வரலாற்றுடன் சம்பந்தப்பட்ட இடங்களைக் கவனிப்போம்.

**மகாமேருமலை:** புராண இதிகாசங்கள் கூறுகிறபடி இது இமயத்தின் வடக்கில் உள்ளது. இது பொன்னிறமுடையது. இதிலே சிவபெருமான், விட்டுணு, பிரமனுதியவர்கள் பெரிய நகரங்களில் வசித்தனர். ஆறுகள் பலவும் நீர்வீழ்ச்சிகளும் பழமுதிர்சோலைகளும் பல நகரங்களும் அங்கிருந்தன. சிவபெருமானுடைய நகரத்தைச் சுற்றி அட்டதிக்குப் பாலகர்களாகிய இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பவர்களுடைய இராச்சியங்கள் அமைந்திருந்தன. மேருவுக்குத் தெற்கே கைலாசமலை இமயத்தின் வட சரிவில் இருக்கிறது.

**கைலை:** வெள்ளிமலை என்று அழைக்கப்பட்டது. கைலைமலையிலே சிவபெருமான் இருப்பார். இமயமலையில் அரசன் ஒருவன் இருந்தான். (சில) புராணக் கூற்றுகளின்படி அவனுக்கு இரண்டு புதல்விகள் இருந்தனர். அதில் மூத்த மகள் பெயர் உமை. இளைய மகளுடைய பெயர் கங்கை. சிவபெருமான் உமாதேவியை மனைவியாகக் கொண்டார். கங்கையைச் சடாமுடியிலே தரித்துக் கொண்டார் என்று புராணங்கள் கூறுகின்றன.

இமயமலைக்கும் கங்கைக்கும் இடையிலே அழகிய வனம் ஒன்றிருந்தது. முனிவர்களுக்குத் தவஞ் செய்யுமிடமாகப் பிரம்மா இவ்விடத்தைக் காட்டினுர். இதன் பெயர்

---

(இருக்கு வேதம் முழுவதையும் படிக்கும் பாக்கியத்தை நான் இன்னும் பெறவில்லை. எனவே இருக்கு வேதத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று திட்டவட்டமாகக் கூற முடியாது வருந்துகிறேன்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைமிசாரணியம். நைமிசாரணியத்திலே வசித்த முனிவர்களுக்குச் சூதமாமுனிவர் காலத்துக்குக் காலம் பல விருத்தாந்தங்களைக் கூறினார். இவ்விருத்தாந்தங்களே புராணங்களாக மாறின. கங்கை நதியை அடுத்தும், அதற்குத் தென் பாகத்திலும் அடர்ந்த வனங்கள் இருந்தன. அவற்றுள் சிறுசிறு குடியிருப்புகளிலே முனிவர்களும் அவர்கள் பத்தினிமார்களும் வசித்துத் தவஞ் செய்து கொண்டிருந்தனர். இப்பெரிய வனங்களுக்குத் தெற்கே விந்தயமலையிருந்தது. விந்தயமலை இந்திய கண்டத்தை இரண்டாகப் பிரித்தது. மேலும் இது கைலைமலை மேருமலை என்பவற்றுக்கு ஒப்பான பெருமை பெற்று விளங்குகிறது. விந்தயத்தின் கருவத்தை அடக்கி அதைக் கடந்து தென்னாட்டுக்கு முதன்முதல் வந்தவர் அகத்தியர் என்றும் அவர் தென்னாட்டுப் பொதிய மலையில் இருந்து தமிழைப் படித்து இலக்கண நூலை எழுதினார் என்றும் புராணங்கள் கூறுகின்றன. விந்தயமலைக்குத் தெற்கே நருமதையாறு சென்றது. அதற்குப் பல கிளை நதிகள் கங்கைக்கு உள்ளது போல் அமைந்திருந்தன. கங்கை மிகப் புண்ணிய நதி. அதன் கரைகளிலே பல நகரங்கள் இருந்தன என்று கண்டோம். அது இமயமலையில் இருந்து ஊற்றெடுத்துக் கிழக்குத் திசை நோக்கியோடி வங்காளக் கடலில் வீழ்கிறது. கங்கையின் கிளைநதிகளில் உயர்ந்தது யமுனையாறு. இது தெற்கேயிருந்து வடக்கேயோடி அலகபாத் நகரண்டையிலே கங்கையுடன் சேர்கிறது. நருமதையாறு கிழக்கிலிருந்து மேற்கே சென்று அரபிக் கடலில் வீழ்கிறது. நருமதையாற்றிலும் அதன் கிளைகளிலும் பல துறைமுகப் பட்டினங்களும், பெரிய நகரங்களும், இராச்சியங்களும் இருந்தன. இவற்றைப் பல அரசர்கள் ஆண்டனர். நருமதையாறும் கங்கை நதியைப்போலப் புண்ணியநதியே. அதன் பக்கங்களிலும் பக்கத்து ஊர்களிலும் அக்காலத்திலே பெரிய கோவில்கள் இருந்தன.

நருமதையாற்றங்கரையையடுத்து இராச்சியங்களும், நகரங்களும் இருந்தபோதிலும் அவைகளுக்கிடையிலே பெரிய வனங்கள் இருந்தன. வனங்களிலே சிறுசிறு ஆச்சிரமங்களிலே முனிவர்கள் தவஞ் செய்துகொண்டிருந்தனர். நருமதையாற்றின் கிளையாறுகளிலே இரண்டு புகழ் பெற்றவை என்று, வடமொழி மகாபாரதத்திலே வன பருவத்திலே, அருச்சுனன் தீர்த்த யாத்திரை செய்த இடத்திலே கூறப்படுகிறது.

''கபிலை'' விசாலியகரணி என்னும் உப நதிகளிலும் நருமதையாற்றிலும் தீர்த்தமாடுவதற்கெனப் படித்துறைகள் கட்டப்பட்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உளத்தினைப் புனிதமாக்கும்
உருத்திர தீர்த்தமாதி
துளக்கறு காளிதீர்த்த
மீறதாய்த் தொகுத்த தீர்த்தம்
அளப்பிலவாகும் தூய
நருமதையாற்றில் என்னக்
களித்த பேரன்பின் மிக்க
கடவுண்மா முனிவர் சொல்வார்''

''மாயிரு ஞாலத்துள்ள
மன்னுயிர்த் தொகைகட் கெல்லாம்
ஆயிர நாவுண்டாயின்
அறையினும் அறையொணுதாற்
பாய்புலி யுரிவை போர்த்த
பண்ணவன் அருளின் ஓங்கும்
தேய்வறு புகழின் மிக்க
நருமதைச் சிறப்பு மாதோ''

என்று கூர்மபுராணம் கூறுகிறது.

பரத கண்டத்துப் பண்டைய வழக்கங்கள் பல அங்கே தோன்றிய மாபெருங் காவியங்களிடையே காணப்படுகின்றன. கிழக்கு நோக்கி ஓடும் ஆறு பெண் என்றும் அதை நதி என்றும்,, மேற்கு நோக்கி ஓடும் ஆறு ஆண் என்றும் அதை நதம் என்றும் அழைப்பது மரபு. எனவே நருமதையை ஆறு என்ற பொதுப் பெயரால் எழுதுகிறேம். நருமதையாற்றுக்குத் தெற்கே பல காவததூரத்திலே தண்டகாரண்யம் என்ற பெரிய வனம் இருந்தது. அந்த ஆற்றுக்கு வடமேற்கிலே விந்தயமலைக்கு வடக்கே காண்டாவனம் இருந்தது. இந்த வனத்தையே அருச்சுனன் எரியூட்டினுன். அதன்பின் அவ்விடம் காண்டவப்பிரத்தம் எனவும், அதன் பின் இந்திரப்பிரஸ்தம் எனவும் பெயர் பெற்றது. நருமதையாற்றின் கழிமுகத்துக்கு வடக்கே கடற்கரையில் துவாரகையிருந்தது. இதைக் கண்ணபிரான் மாயனைக் கொண்டு கட்டுவித்தார் என்று யதுகுல வரலாறுகள் கூறுகின்றன. இந்நகரைக் கடல் விழுங்கி விட்டதால் அவ்விடம் இன்று கடலாயிருக்கிறது.

சிவபெருமானும், விட்டுணுவும் இந்திரன் முதலிய தேவர்களும் பக்தர்களுக்கும், முனிவர்களுக்கும் நருமதையாற்றிலே காட்சி கொடுத்து வரங்கள் வழங்கிய சம்பவங்கள் பல புராணங்களிடையே இருக்கின்றன. அவற்றை விரித்துரைத்தால் அக்கதைகளே பெரிய புராணமாகி விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலின் அவற்றை விடுத்து நருமதையாறு (பிரமகத்தி தோஷத்தை) பிராமண கொலை பாதகத்தை நீக்கிய செய்தியொன்றை மாத்திரம் இதன் கீழ்ச் சுருக்கமாகத் தருகிறோம்.

வடநாட்டிலேயிருந்த சிற்றூரொன்றில் வசித்த பிராமணன் ஒருவன் மரித்தான். அவனுடைய உடலை எரித்துச் சாம்பலையும் எலும்பையும் எடுத்த அவனுடைய மகன் அவற்றைக் கங்கையாற்றிலே கரைத்து விட வேண்டும் என்று எண்ணித் தன் தாயிடம் உத்தரவு பெற்றுக் கங்கையில் உள்ள வாரணசி (காசி) நகரை நோக்கிச் சென்றான். செல்லும் வழியிலே இராப்பொழுதைக் கழிப்பதற்கு வழியில் உள்ள சிறு கிராமத்திலிருந்த வீடு ஒன்றின் புறத் திண்ணைக்கு வந்தான். அதுவும் பிராமணன் ஒருவனுடைய இல்லம். வீட்டுக்காரன் வெளியே வந்து வந்தவனுடைய வரலாற்றைக் கேட்டான். வந்தவனும் உண்மையைக் கூறிவிட்டு, அதிவிடியற்காலையிலே தான் புறப்பட்டு விடுவதாகக் கூறினான். வீட்டிலிருந்த எல்லாரும் உறங்கிவிட வந்தவன் விழித்துக் கொண்டிருந்தான். திண்ணைக்குச் சற்றுத் தூரத்திலே வெண்ணிறப் பசுவொன்றும் அதன் கன்றும் வேறு வேறு மரங்களிலே கட்டப்பட்டிருந்தன. அப்பொழுது பசுக்கன்று தாயிடம், ''அம்மா! இன்று காலை எனக்கு ஒரு சொட்டும் விடாமல் உனது பாலைப் பிராமணன் கறந்து விட்டான். பசி என்னை வாட்டுகிறது. நாள்தோறும் இப்படிச் செய்கிறான். நாளைக்கும் செய்வான். என்றால் பசியைப் பொறுக்க முடியாதே'' என்று அழுதது. தாய் அதற்குப் பதிலாக ''மகளே! உனக்குப் பால் விடாமற் கறக்கும் அவனை நான் நாளைக் காலையில் கொம்பால் குத்திக் கொலை செய்து விடுவேன்'' என்றது. கன்று, ''அம்மா! பிராமணனைக் கொல்வது மகா பாதகம். அப்படிச் செய்தால் உன்னைப் பிரமகத்தி தோஷம் பிடித்து விடும்'' என்றது. தாய் அதற்கு ''மகளே! அதற்கு விடங்கு எனக்குத் தெரியும். நருமதை ஆற்றில் மூழ்கினால் எந்தப் பாவமும் விலகிவிடும். அதில் நீராடுகிறவர்கள் முத்தியடைவார்கள். இறந்தவர்களுடைய எலும்பை அதில் இட்டாலும் அவர்களுக்கு முத்தி கிடைக்கும்'' என்றது.

இந்தப் பேச்சுகளைக் கேட்டுக்கொண்டிருந்த பிராமணன் இதை நேரில் பார்க்க விரும்பினான். வீட்டுக்காரன் அதிகாலையில் விழித்தெழுந்து மற்றவனை நோக்கி ''அதிகாலையிலே போவேன் என்ற நீ ஏன் சுணங்கினாய்'' என்று கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவன் ஒரு சாட்டுச்சொல்லி இன்னும் சொற்ப நேரத்திலே புறப்படப்போகின்றேன் என்றான். வீட்டுக்காரன்பாத்திரத்தை எடுத்துக்கொண்டுபோய்க் கன்றை அவிழ்த்து விட்டான். அது தாயின் முலையில் வாய் வைத்து இரண்டு மூன்று தரம் பாலை உறிஞ்சியவுடன் பிராமணன் கயிற்றைப் பிடித்துக் கன்றை இழுத்தான். தாய் மாட்டுக்குக் கோபம் வந்துவிட்டது. அது ஒரு பாய்ச்சலில் தன்னை கட்டியிருந்த கயிற்றை அறுத்துவிட்டுப் பிராமணனை வயிற்றிலும் மார்பிலும் பலமுறை குத்திவிட்டது. பிராமணன் துடிதுடித்து ஓலமிட்டுப் பூமியில் வீழ்ந்து உயிரைவிட்டான். அவனைக் கொன்ற வெள்ளைநிற மாடு பிரமக்கொலை பாதகத்தினால் கறுப்பு நிறமாகிவிட்டது. அது தன் கன்று பின்தொடர நருமதை யாற்றை நோக்கிப் புறப்பட்டது. மாடுகளைத் தொடர்ந்து வந்தவனும் சென்றான். மாடு நேரே நருமதையாற்றில் இறங்கி தன் உடல் முழுவதையும் ஆற்றிலே பல முறை நனைத்து வெளியேறியது. அதனை மூடியிருந்த கருநிறம் நீங்கிப் பழமையிலும் கூடிய வெண்ணிறத்தை அது பெற்றது. இதைக் கண்ட பிராமணன் தன் தந்தையின் எலும்பையும் சாம்பலையும் நருமதையில் எறிந்து தானும் நீராடினான். அவனுடைய நிறமும் வெண்ணிறமாகிவிட்டது.

இக் கதையைச் சூதமா முனிவர் நைமிசாரண்யத்தில் இருந்த முனிவர்களுக்கு, நருமதையாற்றின் தெய்வீகத் தன்மையை அவர்கள் அறியும்படி கூறினார் என்று புராணங்களிடையே காண்கிறோம்.

மாரியம்மனுடைய வாழ்க்கையிற் பல செய்திகள் நிகழ்ந்த இடம் நருமதையாற்றங்கரை யாதலின் அவ்வாற்றின் தெய்வீகத் தன்மையை இதுவரை கூறினோம்: இனி மாரியம்மன் வரலாற்றைத் தொடங்குவோம்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
04 JAN 2022
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரியம்மன் மான்மியம்

## இரேணுகைப்படலம்

விந்தயமலை பரதகண்டத்தின் நடுவிலே கிழக்கு மேற்காய்ச் சென்று அதை இரண்டாகப் பிரிக்கிறது. அது மிக உயர்ந்த மலை. தேவர்களும் முனிவர்களும் அதை வணங்குவர். சிவபிரான் தேவியாருடன் உறையும் மகாமேரு மலைமேல் விந்தயம் பொருமை கொண்டு வளர்ந்தது. சூரிய சந்திரர்களைச் செல்ல விடாமலும் அது தடுத்தது அதனுல் பரதகண்டத்தின் ஒருபுறம் பகலாகவும் மறுபுறம் இரவாகவும் மாற்றம் உண்டாயிற்று. தேவர்களும் முனிவர்களும் இதைச் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர். அவரும் விந்தயத்தின் செருக்கை யடக்கித் தென்னுட்டுக்குச் சென்று அதைச் செழிப்பிக்குமாறு, தனது திருக்கலியாணத்துக்கு வந்திருந்த அகத்திய மகா முனிவரிடம் கூறினுர். அகத்தியர் முதலிலே இதற்கு இசையாவிடினும், சிவபெருமான் தென்னுட்டுக்குத்தான் வருகைதந்து அகத்தியருக்குத் திருக்காட்சியளிப்பதாகச் சொன்னபோது சம்மதித்தார். அகத்தியர் தென்னுட்டுக்கு வரும் வழியிலே விந்தயமலை கர்வம்கொண்டு உயர்ந்தெழுந்து அவரைத் தென்திசைக்குப் போகவிடாது தடுத்தது. அகத்தியம் பிரணவத்தை ஓதி விந்தயத்தின் தலையிலே தன்கையால் ஒரு குட்டுப் போட்டார். விந்தயமலை தன் கர்வம் ஒடுங்கித் தலை தாழ்ந்து அவரை வணங்கியது. இதன்பின் சூரிய சந்திரர்கள் தடை எதுவுமில்லாது தங்கள் பாதையிலே செல்லத் தொடங்கினர். உலகமும் பழைய நிலைக்கு வந்தது. அகத்தியரும் தென்னுட்டுக்கு வந்து பொதியமலையிலே வசிக்கலானுர்.

விந்தய மலையிலிருந்து பல ஆறுகள் ஊற்றெடுத்து கிழக்கிலும் மேற்கிலும் செல்கின்றன. அம்மலையின் தென்புறத்திலே பெரிய காடுகள் அடர்ந்திருந்தன என்று முன்னர்க் கூறப்பட்டது. அகத்தியருக்குப் பின் பல முனிவர்கள் அக்காடுகளிடையிலே தவஞ் செய்ய வருவராயினர். வானளாவியுயர்ந்த மரங்கள் அங்கே வளர்ந்தன. அவற்றை மூடிய பசுமையான கொடிகள் மிகவும் அடர்ந்திருந்தன. மரங்களிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிகளிலும் பல நிறப்பூக்கள் தொங்கிக்கொண்டிருந்தன. அவற்றிலே தேனீக்கள் நிறைந்து ரீங்காரம் பாடின. பார்த்த விடமெங்கணும் அக்காட்டிலே தேன்கூடுகள் இருந்தன. அவற்றிலிருந்து தேன் எந்த நேரமும் துளித்துக்கொண்டிருந்தது. மயில், நாகணவாய், குயில் முதலிய புட்குலங்கள் அங்கே யதேச்சையாகப் பறந்து பழங்களைத் தின்று கவலையின்றி வசித்து வந்தன. அதிகாலையிலே அவை பாடும் இசைகள் விலங்கினங்களைத் துயில் எழுப்பின. யானை, புலி, கரடி, நரி மான், மரை, முயல் ஆகிய விலங்கினங்கள் அங்கே களிப்புடன் உலாவின. நிலத்திலே பச்சைக் கம்பளம் விரித்தது போன்று பசும் புற்றரை கண்ணுக்கு எட்டிய தூரம் வரை பரந்திருந்தது. இக்காட்டினருகே யிருந்த ஆற்று நீர் தெளிந்து பளிங்குபோல ஓடிற்று. ஆற்றின் அடியிலேயிருந்த வெண்மணலும், அதனிடையிலே மலையிலிருந்து நதியினால் கொண்டுவரப்பட்ட வயிரம், வைடூரியம், மரகதம், புட்பராகம், மாணிக்கம், கோமேதகம், முதலிய இரத்தின வகைகளும் ஆற்றின் அழகை மேலும் சிறப்பித்தன. வாளை, கயல் முதலிய மீனினங்கள் ஆற்றிலே துள்ளிக் குதித்து விளையாடுவதும், அவற்றைக் கொக்கு, நாரை, பருந்து முதலிய பறவைகள் கொத்திக் கொண்டு போவதும், அவை காட்டு மரங்களிலே கூடுகட்டி வாழ்வதும், குஞ்சுகளுடன் குலாவுவதும் பார்ப்போரை மகிழ்வித்தன. இந்த ஆற்றங்கரையிலே ஒரு சிறு குடிசை இருந்தது. அதைச்சுற்றி மா, பலா, வாழை, கமுகு, தென்னை, நாரத்தை, தோடை, நாவல், அத்தி முதலிய கனி தரு மரங்களும் கொன்றை புன்னை, ஆத்தி கோங்கு முதலிய மலர்தரு மரங்களும் முல்லை, மல்லிகை, சண்பகம் முதலிய கொடிகளும் வரிசை வரிசையாக நாட்டப்பட்டிருந்தன. குடிசையின் பக்கத்திலே யாகசாலை ஒன்றும் அதனருகே விருந்தயரும் மண்டபமும் தென்பட்டன. குடிசையின் கொல்லைப் புறத்திலே பசுத்தொழுவ மொன்றும் காட்சியளித்தன.

யாகசாலையிலே எந்த நேரமும் அகில், சந்தனம், சாம்பிராணிமுதலியனவற்றின் புகையும், மணமும், நெய், தேன் பால் முதலிய எரிவதனால் உண்டான நறுமணமும் கலந்து காவத தூரம் வரை தெய்வமணம் கமழ்ந்தது. முனிவர்கள் பலர் அங்கு உறைந்து கோமேதம் அசுவமேதம் முதலிய பல யாகங்களைச் செய்து வந்தனர். யாகம் முடிந்த பின் மண்டபத்திலே அவர்கள் விருந்தயர்வார்கள். சோமலதை என்னும் கொடியிலிருந்து பிழிந்தெடுத்த சாற்றைப் புளிப்பேறவிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுத் தேவர்களுக்குப் படைத்தபின், அந்த மதுரசத்தைக் குடிப்பார்கள். யாகஞ் செய்யுமிடத்திலே எந்த நேரமும் வேதகீத ஒலியும் விருந்தயர்வார் ஆர்ப்பாட்டமும் நிறைந்திருக்கும்.

முற்கூறிய பர்ணசாலை ஒன்றில் வேதியர் ஒருவர் தம் தர்மபத்தினியுடன் வசித்து வந்தார். உயர்ந்து நிமிர்ந்த தோற்றமும் கட்டுப்பாடான உடலும், அகன்ற கண்களும், பொன்னிற மேனியும், அகன்ற மார்புவரை தொங்கிய தாடி மயிரும், உச்சியிலே கற்றையாக முடிச்சுப் போட்ட சடையும், திரண்டு பருத்த கையொன்றிலே தண்டமும், மறுகையிலே கமண்டலமும், அரையிலிருந்து முழந்தாள் வரை தொங்கிப் பின்னுற் சொருகிய காவி உடையும், குமிழ் மிதிதடியும் தரித்த அவரைக் கண்டவர்கள் சிவபெருமானே முன்னிற்பதாக உணர்வார்கள். பத்தாவுக்கேற்ற பதிவிரதையாகிய இவருடைய தரும பத்தினியார் அளவான உயரமுடையவர். மெல்லிய கொடி போன்ற தேகமுடையவர். அவருடைய கூந்தல் நீண்டு சுருண்டு முழந்தாள் வரை தொங்கியது. அருட் பார்வையும் இன்சொல்லும் புன்முறுவலும் பொன்னிற மேனியும், மந்த நடையும், வெண்ணிற உடையும் இவரைத் தெய்வப் பெண் என்று எண்ணச் செய்யும். இந்த அம்மையாரையும் அவருடைய கணவரையும் பார்த்தவர்கள் தென்னுட்டவருடன் கலந்த வடநாட்டவருடைய வழியில் வந்தவர்கள் இவர்கள் என்பதைச் சொல்லாமலே விளங்கிக் கொள்வார்கள். இந்த அம்மையார் வைகறைப் பொழுதிலே கண்விழித்தெழுந்து, கணவருடைய தாள்களை வணங்கியபின், அருகிலேயுள்ள நருமதை ஆற்றுக்கு நீராடச் செல்வார். நீராடிய பின் தெண்ணீரை மொண்டுகொண்டு வந்து, அக்கினி பகவானுக்கு அஞ்சலி செய்துவிட்டு அடுப்பில் நெருப்பேற்றி முதலிற் பாலைக் காய்ச்சிவிட்டு அதன்பின் இட்டலி, வடை, தோசை முதலிய பலகார வகைகளைச் செய்து குவிப்பார். இந்த நேரத்திலே முனிவர் படுக்கை விட்டெழுந்து நீராடிக் காயத்திரி முதலிய ஜெபங்களை ஓதிச் சிவ பூசை செய்து முடித்துவிட்டு வீட்டுக்கு வருவார். இதனிடையிலே இவர்களுடைய நான்கு மக்களும் உணவுக்குரிய அரிசி கறிப் பதார்த்தங்களையும், பூசைக்குரிய பால், தேன், சமித்து வகைகளையும், அர்ச்சனைக்குரிய பத்திரங்களையும் பூக்களையும் மற்றும் பொருட்களையும் கொண்டு வந்து சேர்ப்பர். அம்மையார் தனது கணவருக்கும் வந்திருந்த முனிவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிய சகலருக்கும் குருத்து வாழையிலே போட்டு உணவு பரிமாறுவார். உணவு முடிந்த பின்னர் வேதமோதல், கீதம் பாடல், யாகஞ் செய்யும் ஆயத்தங்கள் முதலியன அங்கே நடக்கும். இவ்வித புண்ணிய கருமங்கள் நடக்கும் இடத்தில் நிகழ்ந்தவற்றை இதுவரை கூறினோம். இனி இவர்கள் யார் என்பதை நோக்குவாம்.

## சமதக்கினி

நருமதை நதிக்கு வடக்கேயிருந்த அடர்ந்த வனத்திலே முனிவர்கள் பலர் வசித்து யாகஞ் செய்து வாழ்ந்தனர். அங்கே பிரமாவுடைய மானச புத்திரராகிய பிருகு முனிவருடைய வம்சத்திலே வந்த இருசிகர் என்னும் பெயருடைய முனிவர் ஒருவர் இருந்தார். அவ்வரிய வனத்தின் ஒரு பாங்கரிலே குசநாபன் என்று ஒரு முனிவர் வசித்து வந்தார். அவருக்கு காதி என்று ஒரு மகன் பிறந்தான்.

காதிக்கு விசுவாமித்திர முனிவரும் சத்தியவதி என்னும் ஒரு பெண்ணும் பிறந்தனர். இருசிக முனிவர் காதியிடத்திலே ஆட்களை அனுப்பித் தனக்குச் சத்தியவதியை மனைவியாகத் தரும்படி வேண்டினார். அவர் வேண்டிக்கொண்டபடியே இருசிகருக்கும் சத்தியவதிக்கும் மணவினை மங்களகரமாக நடந்தது.

இருசிகரும் சத்தியவதியுமாகத் தனி வாழ்க்கை நடத்துவதற்கு வேறிடத்திற்குச் சென்றனர். அங்கே அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்குச் சமதக்கினி என்று பெயரிட்டனர். சமதக்கினி என்றால் புலன்களை வென்றவன் என்றும், யாகம் புரிபவன் என்றும் பொருள். இவரே முன்னர் கூறிய சமதக்கினி முனிவர்.

## இரேணுகை

வடமேற்கு இந்தியாவிலே சிந்து (இந்து) நதியும் அதன் கிளை நதிகளும் ஓடி வளம்படுத்தும் பிரதேசம் பாஞ்சாலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பஞ்சாம்) எனப்படும். இந்த நதிகள் யாவும் இமயமலையில் இருந்து உற்பத்தியாகின்றன. அவை புண்ணிய தீர்த்தங் கள் என்று இதிகாச புராணங்கள் கூறுகின்றன.

பாஞ்சாலத்துக்குத் தென்கீழ்த் திசையிலே உள்ள பிர தேசம் மிகவும் செழிப்புடையது. அங்கே வசிப்பவர்களுக்கு உணவுக்குக் குறைவில்லை. இவர்கள் முன்னொரு காலத்திலே தென்னாட்டிலிருந்து வட நாட்டுக்குச் சென்று குடியேறிக் காலவரையிலே வடக்கிலிருந்தவர்களுடன் கலந்தவர்களு டைய சந்ததியைச் சேர்ந்தவர்கள். இவர்களை இரேணு என் னும் அரசன் ஆண்டு வந்தான். அவன் தர்மசீலன். ஏழைகள் மேல் அவனும் மனைவியும் அளவிறந்த இரக்கமுடையவர்கள். விவாகமாகிப் பல ஆண்டுகள் சென்றனவாயினும் இவர்க ளுக்குப் புத்திரபாக்கியம் கிடைக்கவில்லை. அதனால் இவர் கள் நாட்டைத் துறந்து காட்டிலே தவஞ் செய்யப் போயி னர். பல நாட்கள் தவம் நீடித்தது. அவர்களுடைய தவத்து க்கு அருள் செய்யாமையைக் கண்ட உமாதேவியார் சிவபெ ருமானை நோக்கித் ''தேவரீர்! இரேணுவும் மனைவியும் தவஞ் செய்கிறார்கள். அவர்களுக்கு குழந்தையொன்றைத் தேவரீர் அருளுவீர்களாக'' என்று வேண்டினார். சிவபெருமான் அதற்குப் பதிலாக ''தேவி! இரேணுவும் மனைவியும் பக்தி நிறைந்தவர்கள். அவர்களுக்கு உன்னைப் போன்ற ஒரு குழ ந்தை தான் வேண்டும்'' என்றார். அதற்கு உமாதேவியார் நானாவது கங்காதேவியாவது இரேணுவுக்கு மகளாகப் பிறக்க விரும்புகிறோம். அப்படிப் பிறந்து அறிவு குறைந்த ஏழைமக்களுடைய நோய் வறுமையாதியவற்றை அகற்ற விரும்புகிறோம்,'' என்றார். சிவபெருமான் பின்வருமாறு பதி லுரைத்தார்.'' தேவி, நீ மலையரயன் மகளாகவும் தக்கன் மகளாகவும் மண்ணுலகிற் பிறந்து விட்டாய் இன்னும் தென் பாண்டி நாட்டிலே மலயத்துவசன் மகளாகவும் வரவிருக் கிறாய். கங்காதேவி ஒரு இடத்திலே அடைபட்டிருந்தால் உலகம் வளங்குறைந்து விடும். எனவே உனது நவசக்திக ளுள் ஒருவரைக் கங்கையின் விருப்பத்துடன் அனுப்பிப் பூமி யிலே நல்லோர்களுடைய இடர்களைக் களைந்து தீயோரை ஒறுத்தல் செய்து பாமர மக்களுடைய நோய்களையும் அகற்றி வரவேண்டும் என நான் விரும்புகிறேன். மேலும் நீ பூமியில் இருக்கும் நாட்களிலே தவமுநியோர் ஒருவருக்கு மனைவியா வாய். நான்கு மக்களைப் பெறுவாய் அவர்களுள் இளையவன் உனது தமையனாகிய விஷ்ணுவின் அம்சமாகப் பிறப்பான். அபாண்டமான குற்றச் சாட்டில் நீ கொல்லப்படுவாய். தீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை எரிக்காது. இதனுடன் உனது மனித சுபாவம் ஒழிந்து போம். அதன்பின்பு நீ விந்தயத்துக்கு வடதிசை யாற் சென்று துட்டர்களை அழித்து நல்லவர்களுக்கு அருள் புரியத் தவமிருப்பாய். உன்னுடைய தவத்துக்கு நான் வரு வேன். அதன்பின் கிராமதேவதையாகித் தென்னாட்டுக்குச் சென்று கப்பலேறி இலங்கை முதலிய இடங்களைத் தரிசித்து விட்டுக் காஞ்சியிலே கோயிலமைத்து என்னை வழிபட்டு என் னுடன் வந்து சேர்வாய்,'' இவ்விதம் சிவபெருமான் கூறிய தைக் கேட்ட தேவி தனது சக்திகளில் ஒன்றைக் கங்கையு டைய சக்தியுடன் சேர்த்துப் பூமிக்கு அனுப்பினார். அந்தச் சக்திஒருபெண்குழந்தையுருவாகிஇரேணுவும்மனைவியும்தவம் புரிந்த இடத்துக்கு அருகிலே சிந்துநதிக் கரையிலிருந்த தருப் பைப் புல்லின் மேற்கிடந்து அழுதது. அழுகைக்குரல் கேட்ட இரேணுவும் மனைவியும் மனித சஞ்சாரமில்லாத வனத்திலே சத்தம் வந்த திசையை நோக்கிச் சென்றனர். தருப்பையின் மேலே ஆற்றங்கரையிலே கிடந்த குழந்தையை இரேணு குனிந்து எடுத்து மனைவியிடம் கொடுத்தான். அவள் குழந் தையைத் தனது மார்போடணைத்தலும் அவளுடைய தனங் களிரண்டிலிருந்தும் பால் பெருகி வழியத் தொடங்கியது. குழந்தைக்குப் பால் அருத்தி இருவரும் அதை அரண்மனைக் குக் கொண்டு வந்து வளர்த்தனர். இப்பிள்ளைக்கு 'ஆதிரை' என்று பெயருஞ் சூட்டினர். வடவர்களுடைய வழக்கத்தின் படி, இவள் இரேணுவின் மகளாயிருந்தமையின் இரேணுகை என அழைக்கப்பட்டாள். அரசனுடைய ஒரே மகளாக இரேணுகை இருந்தமையின் அரச மரபிற்குரிய பயிற்சிகள் அவளுக்குப் பயிற்றப்பட்டன. வில்வித்தை, வாட்பயிற்சி, குதிரையேற்றம், யானையேற்றம், தேர் செலுத்துதல் முத லிய ஆண்களுக்குரிய பயிற்சிகளிலும் அவள் தேர்ச்சியுறலா னாள். மேலும் குடும்ப நிர்வாகம், யாகமுறைகள், ஆகிய வற்றிலும் பயிற்சி பெற்றாள். பேதைப் பருவம் கடந்து பெது ம்பைப் பருவத்தை இரேணுகையடைந்தபோது அவளுடைய மாசற்ற உள்ளத்தைப்போல் உடல் வளமும் யாவரையும் கவரக்கூடியதாகவிருந்தது. அவளுடைய அறிவு, திறமை, அழகு முதலியவற்றையறிந்தவர்கள், இவள் பூமிக்கு வந்த பார்பதி என்றும், இலக்குமி என்றும், சரஸ்வதி என்றும் பலவாறு பாராட்டினர். பெண்களே அவளின் பெண்ணழகு கண்டு மகிழ்ந்தனர். இரேணுகை இவ்விதம் வளர்ந்து வரு வதைச் சமதக்கினியாரும் அவருடைய உறவினரும் அறிந்த னர். பார்ப்பார் வேறு குலத்திலே அடிமையாகப் பெண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுவர். சமதக்கினியார் பார்ப்பானரென்று சொல்லப்பட்டபோதிலும் அவருடைய தாயார் விசுவாமித்திரர் என்று புகழ்பெற்ற அரசகுலத்து முனிவருடைய சகோதரி என்பதை முன்னரே கூறினோம். எனவே சமதக்கினியாரும் அரைவாசி அரச பரம்பரையைச் சேர்ந்தவர் என்பது தெளிவாகிறது. ஆனால் இவர் தன் தந்தையாகிய இருசிகர் என்ற பார்ப்பனர் மகனாகப் பிறந்து வனத்திடை வளர்ந்து யோகம் முதலிய முறைகளைப் பயின்று யாகம் முதலியவற்றிலே தேறி வந்தனராதலின் இவரிடம் தாம் அரசபரம்பரையினர் என்னும் எண்ணம் இல்லாது போயிற்று. இப்படியிருந்தும் வேறு பெண்களிலும் பார்க்க இரேணுகை அழகிலும் பக்தியிலும் சிறந்தவளாதலின் அவளைச் சமதக்கினியாருக்கு மணம் முடிப்பிக்க அவருடைய சுற்றத்தவர் விரும்பினார்கள். சமதக்கினியாரும் சம்மதித்தார். எனவே இருசிக முனிவரும் சமதக்கினியாருக்கு இரேணுகையை மணம் பேசி வருமாறு இனத்தவர்களையும், இருடிகளையும் இரேணு மன்னனிடம் அனுப்பினர். அவர்களைக் கண்ட இரேணுவும் இராணியும் உவகைக் கடலிலே மூழ்கியவர்களாய், பெண் கேட்டு வந்தவர்களுக்கு விருந்து முதலிய உபசரணைகள் செய்து தங்களுடைய சம்மதத்தையும் தெரிவித்து வழியனுப்பி வைத்தனர். இவற்றின் பின் நல்ல ஓரையிலே இரேணுகைக்கும் சமதக்கினியாருக்கும் மங்களகரமாக மணவினை வேத வேதியர்கள் முன்னிலையில் வேதமுறைப்படி நடந்தது. விவாகம் நிறைவேறிய பின்னர் புதிய தம்பதிகள், மிக இளம் பருவத்தினராக இருந்தமையின் கவலையெதுவுமின்றிச் சுதந்திரப் பறவைகள் போல வாழ்க்கையை நடத்தலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரசுராமன் பிறப்பு.

சமதக்கினியாரும் இரேணுகையும் நருமதையாற்றங் கரையிலே தனிக் குடும்பம் நடத்தி யாகம் செய்து விருந்தினரை உபசரித்து வாழ்ந்து வந்தார்கள். இவர்களுக்குத் தண்ணுவன், அணுவன், விசுவாவசு, பரசுராமன் என்னும் நான்கு புதல்வர்கள் பிறந்தனர். இந்த நான்கு பேரிலும் கடைசி மகனுன பரசுராமன் இந்தியாவில் எழுந்த பழைய இதிகாச புராணங்கள் எல்லாவற்றிலும் பேசப்படுகிருன். அவன் திருமாலின் அம்சமாகச் சொல்லப்படுகிருன். ஆதலின் அவனுடைய அவதாரத்தைச் சிவபுராணத்தில் உள்ள படி காண்போம்.

பிரமதேவனுடைய மானச புத்திரர் ஆகிய பிருகுமுனிவருக்குப் புலோமசை, கியாதி என்பவர்கள் மனைவியர்கள். இவர்களில் கியாதி கர்த்தமமுனிவருடைய மகள். இந்த நாட்களிலே மகாவிஷ்ணுவுக்கு எதிராக அசுரர்கள் போர் செய்தனர். விஷ்ணு அவர்களைத் தோற்கடித்தார். அவருக்குப் பயந்த அசுரர்கள் கியாதியிடத்திலே அடைக்கலம் புகுந்தனர். திருமால் இதனுல் கோபங்கொண்டு கியாதியைக் கொலை செய்தார். பிருகு முனிவர் இதனுல் கோபமுற்றுத் திருமாலை "நீ உலகத்திலே பத்துப் பிறவியெடுத்துழல்வாய். ஒரு பிறவியிலே உன் மனைவியை வேறொருவன் கவர்வான்" என்றும் சாபமிட்டார். இப்படிச் சாபம் பெற்ற பிறவியொன்றிலே விஷ்ணு பரசுராமனுகப் பிறந்தார். அக்கதை வருமாறு:-

காதி என்பவருக்கு சத்தியவதியும் விசுவாமித்திர முனிவரும் மக்கள். அவர்களில்விசுவாமித்திரர்இளையவர். சத்தியவதியை இருசிகர் என்னும் முனிவர் மணம் முடித்தார் என்று முன்னர்க் கூறினேம். சிவபுராணம் இவரை நிசிதர் என்று கூறுகிறது. நிசிதரும் இருசிகரும் ஒருவரேயாவர். காதிக்கும் மனைவிக்கும் பிறந்த முதல் மகளான சத்தியவதிக்குப் பின் அவர்களுக்குப் பிள்ளைகள் பிறவாததினுல் காதி புத்திரகாமேட்டி யாகம் செய்தார். அந்த யாகத்தில் இரண்டு கருக்கள் உற்பத்தியாயின. அந்தக் கருக்களைக் காதி தன் மனைவியிடம் கொடுத்து, அவற்றில் முதலாவதை அவள் உண்ணும்படியும் அப்படி உண்டு பிறக்கிற சிசு சத்திரிய வீர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞக விருப்பான் என்றும் மற்றதை அவர்களுடைய மகள் சத்தியவதி உண்ண வேண்டும் என்றும் அதிலே உண்டாகிற சிசு ஞானபுதல்வனுயிருப்பான் என்றும் கூறினுன். கருக்களைப் பெற்ற காதியின் மனைவி தன் தாயிடம் அவற்றைக் கொடுத்து மற்ற விபரங்களையும் கூறினுள். தாய் வஞ்சகமாக இந்த ஒழுங்கை மாற்றி, முதலாம் கருவைச் சத்தியவதிக்கும் இரண்டாம் கருவைக் காதியின் மனைவிக்கும் கொடுத்து உண்பித்துவிட்டாள். அதனுல் காதியுடைய மனைவியின் வயிற்றில் ஞானப்புதல்வனுகிய விசுவாமித்திரனும் சத்தியவதியின் உதாத்திலே ஒரு சத்திரிய வீரனும் உற்பத்தியானுர்கள். சத்தியவதிக்கு இது தெரியாது. ஆனுல் அவளுடைய கணவர் நிசிதர் என்னும் இருசிகர் இதை ஞான திருட்டியால் அறிந்துவிட்டார். நிசிதர் சத்தியவதியிடம் ''உன்வயிற்றிலே சத்திரிய வீரன் பிறக்கப் போகிருன்'' என்ருர். அவள் அதற்கு உத்தரமாக, எனக்கு அப்படியான மகன் வேண்டாம், எனது மகனுகிய சமதக்கினியின் மகன் சத்திரிய வீரனுகப் பிறக்க வரங் கொடுக்க வேண்டும் என்று நிசிதரை வேண்டினுள். நிசிதரும் அதற்கு இசைந்தார்.

இதன்படியே திருமால் சத்திரிய வீரனுக அவதாரம் எடுத்துச் சமதக்கினியின் புதல்வனுக இரேணுகை வயிற்றிற் பிறந்தார். திருமாலாற் கொல்லப்பட்ட கியாதியைச் சுக்கிராச்சாரியார் மிருத்து சஞ்சீவி மந்திரத்தை உபாசனை பண்ணி உயிர் பெற்று எழச் செய்தார்.

கந்தபுராணத்தின் ஏழாவது காண்டமாகிய உபதேச காண்டம் சமதக்கினியாரையும் இரேணுகையையும் அவர்களுக்குப் பிறந்த கடைசி மகனுகிய பரசுராமனையும் பற்றிக் கூறும் இரண்டு பாடல்கள் வருமாறு:—

''ஒருங்கிய மனத்தியோக முற்றுணர்ந் தொருவா நின்றேன்
அருந்தவ முருவுவேண்டி யருந்தவஞ் செய்த தன்னேன்
கருங்கட விலத்துக்காம முதலிய கடந்தோன் தெய்வப்
பெருங்குணச் சமதக்கினி யென்றொரு பேரினின்றேன்.

ஆங்கவற் குயிரேயன்னுள் அருந்தவச் சிறப்பினின்றுள்
வாங்கருங் கற்பின் தெய்வப் பத்தினிமடவாள் மெல்லென்
றேங்கிய நுசுப்பினெல்கு மிரேணுகை யென்பால் தன்பாற்
தேங்கமழ் துளவத் தோளான் திருவவ தாரஞ் செய்தான்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரேணுகை அரசகுடும்பத்திலே வளர்ந்தவள். அதனால் அவள் வில்வித்தை முதலிய கலைகளைப் பயின்றிருந்தாள் என்று முன்னர் கூறப்பட்டது. வில்வித்தை, யானையேற்றம், குதிரையேற்றம் முதலியவைகளை அவள் சமதக்கினியாருக்குப் பயிற்றி வந்தாள். ஒருநாள் சமதக்கினியாரும் இரேணுகையும் வேனிற்காலத்திலே காட்டில் நடந்து தென்திசைக்கு வந்து கொண்டிருந்தனர். சூரியன் தனது கிரணங்களையும் பரப்பியதினால் இருவருடைய உடல்களும் வேதனையுற்றன. நிலத்தின் சூடு இவர்களுடைய பாதங்களிற் கொப்புளம் உண்டாக்க கூடிய அளவு சுட்டது. சமதக்கினியாருக்குச் சூரியன் மேற் கோபம் மூண்டது. அதனால் அவர் ஒரு மரத்தின் சிறுகிளையைப் பிடுங்கி வில்லாக வளைத்தார். இரேணுகை வேறு ஒரு தடியை எடுத்துக் கொடுத்து அம்பாக அதைப் பிரயோகித்துச் சூரியனுக்கு எய்யும்படி கூறினாள். சமதக்கினியார் வில்லிலே அம்பைப் பூட்டிச் சூரியனுக்கு எதிரே நீட்டி மந்திரத்தை உச்சரித்தாள். இதைக் கண்ட சூரியபகவான் பயந்து தன் உருவத்தை மாற்றி பிராமண உருவம் கொண்டு இருவர் முன்பும் வந்து மண்டியிட்டு வணங்கித் தன் குற்றத்தை மன்னிக்குமாறு வேண்டினான். மேலும் அவன், நிழலுக்குப் பிடிக்கும் குடையும், காலுக்குத் தரிக்கச் செருப்பும் அவ்விருவருக்கும் வழங்கி விட்டுத் தன்னிருப்பிடம் சேர்ந்தான்.

புரட்டாதி மாதத்திலே அமரபட்சத்திலே சமதக்கினியார் பிதிரர்களுக்கு மகாளயம் செய்தார். அவர்களுடைய உணவுக்குரிய சோறு, கறி, பால், பழம், தயிர், நெய் ஆதியன அந்தப்பூசைக்குப் படைக்கப்பட்டிருந்தன. அந்தச் சிறியயாகத்தில் உணவருந்தலாம் என்று குரோதம் என்னும் தேவதை வந்தது. உணவை அள்ளியுண்ணும் ஆசையுடன் வந்த தேவதை பால் வார்த்து வைக்கப்பட்டிருந்த பொற்கலசத்தைத் தனது காலால் இடறிச் சாய்த்து விட்டது. சமதக்கினியார் இதைக் கண்டவுடன் அடங்காச் சினங் கொண்டு, அதைச் சபிக்க எண்ணி வாய்திறக்கு முன் அத்தேவதை அவருடைய பாதங்களில் வீழ்ந்து தன்னை மன்னித்தருளுமாறு பரிந்து வேண்டிற்று. சமதக்கினியாரும் இரக்க மேலீட்டால் அதனை மன்னித்து விட்டார். மகாளயத்து அவியுணவையுண்ணவந்த பிதிர்கள் (தென்புலத்தார்) இதைக்கண்டு பெருஞ்சினங் கொண்டு சமதக்கினியாரை நகுலம் ஆகுமாறு சபித்தார்கள். சமதக்கினியாரும் நகுலம் (கீரி) ஆகமாறிக் காட்டில் அலைந்து திரிவாராயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சம்பவம் நடந்து சிலகாலஞ் சென்ற பின்னர், அந்த வனத்தையடுத்த கிராமத்திலே சத்துப்பிரத்தன் என்னும் சிற்றரசன் தரும அரசியற்றிக் கொண்டிருந்தான்.

அவன் தினந்தோறும் இருடிகளுக்கும் ஏழைமுதல் பல நிலையில் உள்ளவர்களுக்கும் அன்னதானம் வழங்கி வந்தான். பசியால் அலைந்து திரிந்து கொண்டிருந்த சமதக்கினியாராகிய நகுலம், ஒருநாள், விருந்தில் உண்டுமிஞ்சிய எச்சிலையுண்டு தன் பசியைத் தீர்த்தது. தர்மவானாகிய சத்துப்பிரத்தன் அளித்த அன்னதானத்தையுண்டமையால் அக்கீரி பொன்னிறம் பெற்றது.

இன்னும் சில காலஞ் சென்றபின் அந்த நகுலம் இந்திரப்பிரஸ்தம் என்னும் நகரிலே தருமபுத்திரர் செய்வித்த அசுவமேதயாகத்தில் உண்டு பசி தீர்ந்தது. அன்று தொடக்கம் அந்நகுலத்தை வாட்டிய யானைத் தீ என்னும் நோய் தீர்ந்து விட்டது. இதனால் மகிழ்வுற்ற நகுலம் தருமபுத்திரரிடமும் மற்றவர்களிடமும் அசுவமேதயாகத்தின் சிறப்புகளையும் அந்த யாகத்திலே உண்டதனால் தன் தீராப்பசி தீர்ந்து விட்டதையும் புகழ்ந்து கூறிற்று. இதைக் கண்ட பிதிரர்கள் தாங்கள் இட்ட சாபம் அன்றோடு திர்ந்துவிட்டது என்று கூறவே நகுலம் மனித உருப்பெற்றுப் பழைய சமதக்கினி முனிவராக மாறிற்று.

சமதக்கினியார் சாபம் நீங்கியபின் இரேணுகையுடனே தனியான இடத்திலே குடும்ப வாழ்க்கை நடத்தத் தொடங்கினார். இந்நூலின் தொடக்கத்திலே இவர்கள் நருமதையாற்றங்கரையிலே வாழ்க்கை நடத்தத் தொடங்கியது பற்றிக் கூறப்பட்டது. இவர்கள் வாழ்ந்துவந்த நாட்களில் நடந்த சம்பவங்கள் இனிக் கூறப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தவீரியப் படலம்

இந்தியாவின் வடக்கிலேயுள்ள இமயமலையிலிருந்து வரும் பல நதிகள் ஒன்று சேர்ந்து கங்கையாறு ஓடிவருகிறது. அந்நதிகளை அண்டிய பகுதிகளில் பல இராச்சியங்கள் இருந்தன. கேகய நாடு என்பது அவற்றில் ஒன்று. அந்த நாட்டைச் சூரிய வம்சத்து அரசர் முற்காலத்தில் அரசு செய்தனர். அவர்கள் தென்னாட்டிலிருந்து சென்ற திராவிடருடன் வட நாட்டவர் கலந்து பிறந்தவர்கள் என்று தெரிகிறது. தனகன் என்னும் அரசன் அந்நாட்டை அரசு செய்தான். அவனுக்கு கிருதவீரியன் என்னும் பெயரும் உண்டு. அவன் மனைவியின் பெயர் சுகந்தை. இவ்விருவருக்கும் நெடு நாட்களாகப் புத்திர பாக்கியம் கிடைக்கவில்லை. அதனால் இருவரும் யாகங்கள் செய்து இறைவனை நோக்கித் தவமிருந்தனர். இறைவன் இவர்களுக்குத் தரிசனமாகி அவர்கள் விரும்பியது யாது என வினவினான். தனகன் ''சுவாமி எனக்குப் புத்திரரில்லாத குறையை நீக்கியருள வேண்டும்'' என்று வேண்டினான். இறைவன் அவனை நோக்கி ''நீ முற்பிறப்பிலே சாம்பன் என்னும் பெயருடன் அரசனாய் இருந்தாய். அந்நாட்களிலே பலவித மகாபாதகங்களைச் செய்தாய். உன் மக்களும் துட்டர்களாய் இருந்தனர். பிருகு முனிவருடைய சாபத்தால் அவர்கள் மாண்டு போனார்கள். நீயும் வறியவனாகி அலைந்து திரிந்தாய். அக்குறை இப்பிறவியிலும் உன்னைத் தொடர்கிறது. அக்குற்றத்துக்கு ஏற்ற ஒருவனை மகனாகப் பெறுவாய்'' என்று சொல்லி மறைந்தருளினார். இச்சம்பவம் காவிரி நதி பாயும் தென்னாட்டிலே நடந்ததாகச் சிலபுராணங்கள் கூறுகின்றன.

தனகன் வனத்திலிருந்து மகிஷ்மதி என்னும் தனது நகருக்கு மனைவியுடன் வந்தான். இவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு பிறவியிலேயே கைகளும் கால்களும் இல்லாதிருந்ததைக் கண்டு பெற்றோர் மிக வாடினார்கள். ஒரே மகன் ஆதலின் அங்கவீனனாய் இருந்த போதிலும் அவனை அன்போடு கிருதவீரியன் வளர்த்தான்.

இக்குழந்தைக்கு அருச்சுனன் என்று கிருதவீரியன் பெயர் சூட்டினான். வடவருடைய தந்தை தந்த முறைப்படி கார்த்தவீரியன் என்றும் கார்த்தவீரியார்ச்சுனன் என்றும் புராணங்களிலே இவன் கூறப்படுகிறான். நாம் இவனைக் கார்த்தவீரியன் என்று அழைப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல ஆசிரியர்களைக் கொண்டு அறுபத்துநான்கு கலைகளையும் கிருதவீரியன் மகனுக்குக் கற்பித்தான். கலைகளை ஒருவாறு கற்றறிந்த கார்த்தவீரியன் தனது பன்னிரண்டாவது வயதிலே ''தாத்திரேயர்'' என்னும் முனிபுங்கவரிடம் சென்று படித்தான். இவனுடைய திறமையைக் கண்ட முனிவர் அவனுக்கு உபதேசங் கொடுத்து உனக்கு வேண்டிய வரங்களைக் கேட்பாயாக'' என்றார். பேராசையே பிடித்துக் கைகளும் கால்களுமில்லாதிருந்த அவன் ''தேவரீர் எனக்கு இரு கால்களையும் ஆயிரம் கைகளையும் தரல் வேண்டும், அவற்றால் யான் எல்லாரையும் வென்று விரும்பிய சுகங்களையும் அனுபவிக்க வேண்டும்'' என்று வேண்டினான். முனிவரும் அதற்கிசைந்தார். உடனே இவன் இரண்டு கால்களையும் ஆயிரங் கைகளையும் உடையவனாகித் தன் ஊருக்கு வந்து சேர்ந்தான்.

இதன் பின்பு அவன் மற்றவர்களிடம் இல்லாத ஆயுதம் ஒன்று தன்னிடம் இருக்கவேண்டும் என்று எண்ணித் கிருதா என்னும் முனிவரிடம் சென்று பணிந்து வணங்கி அவரைப் பிரியப்படுத்தி அவரிடமிருந்து அக்கினி அம்பு ஒன்றைப் பெற்றுக் கொண்டான். அரசனாதலினால், அவன் தான் கண்ட அழகிய பெண்களை வலோற்காரமாகப் பிடித்துக் கவர்ந்து கொண்டு வந்து தனது அந்தப் புரத்திலே வைத்து மனைவிகளாக்கிக் கொண்டான். அவனுக்குப் பதினாயிரம் மக்கள் பிறந்தனர் என்றும் அவன் எண்பத்தையாயிரம் ஆண்டுகள் வசித்தான் என்றும் புராணங்கள் கூறுகின்றன. திருப்பாற் கடலைத் தேவர்களும் அசுரர்களும் கடைந்தபோது அவன் தேவர்கள் பக்கம் நின்று கடைந்தான் என்ற புராணக் கதையும் உண்டு. அமுதத்தைக் குடித்ததினால் அவன் 85000 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தான் என்றும் புராணம் கூறுகிறது.

கார்த்தவீரியனுடைய வீரத்தை இராவணன் தனது தூதுவர் மூலமறிந்தான். பத்துத் தலையுள்ள தன்னிலும் பார்க்க ஒரு தலையுடன் ஆயிரம் கையுள்ளவன் பலசாலியாக இருக்க முடியாது. ஆதலின் யுத்தம் செய்து அவனை வெல்ல வேண்டும் என இராவணன் எண்ணினான். எண்ணியவன் தென்கோடியிலுள்ள இலங்காபுரியிலிருந்து வடக்கேயுள்ள நருமதை நதிவரை சென்று கார்த்தவீரியனைத் தேடினன். கார்த்தவீரியனை இராவணன் காணமுடியாது போயிற்று. அவனைக் காணும் வரை நருமதையின் தீரத்திலே சிவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசை செய்ய எண்ணிய இராவணன், சிவலிங்கம் ஒன்றை அமைத்து முறைப்படி சிவபூசை செய்து கொண்டிருந்தான். இராவணன் அங்கே வந்ததையும் சிவபூசை செய்து கொண்டிருந்ததையும் அறியாத கார்த்தவீரியன் சற்று வடக்கே நருமதை ஆற்றிலே தன் மனைவியருடன் நீராடிக் கொண்டிருந்தான். கார்த்தவீரியன் காமலோலனாகி அவர்களோடு விளையாடி நருமதையிலே அவர்களுடன் பலவித லீலைகள் புரிந்து விளையாடினான். தன்னுடைய காதல் மனைவியரை அச்சுறுத்திக் கேலி செய்ய எண்ணினான் கார்த்தவீரியன்.

**நருமதை யாற்றினடி வெண்மணக்குன்றில் நனகன்**
**அரனுடைப் பூசையாற்றி யிராவண ணமருமேல்லை**
**மருவுமா யிரம்பொற் கையால் வரநதி தடுத்து வேந்தன்**
**பொருவரு மகளி ரோடும் பூம்புனலாட லுற்றான்**

என்று கூர்ம புராணம் அகத்தியன் இராவணன் மரபு உரைத்த அத்தியாயம் (101) இதை விவரமாக கூறுகிறது.

அதற்காக அவன் ஆற்றின் நடுவில் நின்றுகொண்டு தன் ஆயிரம் கைகளையும் விரித்து அணைகட்டினது போல நீரை ஓடவிடாமல் தடுத்துக்கொண்டிருந்தான். அவனுக்கு முன் நீர் பிரவாகம் எடுத்து நீர் மட்டம் உயர்ந்தது. பின்புறமாக உள்ள நீர் குறைந்து போயிற்று. முன்புறத்திலே அவனுடைய தேவிமார் நீந்தியும் சுழியோடியும் பலவித கேலிகளும் சேட்டைகளும் செய்து விளையாடினர். இவர்களை வெள்ளநீர் அடித்துக்கொண்டு போனால் அவர்கள் பயந்து ஓடி வழி விடுவார்கள், தான் அவர்களைக் கேலி செய்யலாம் என்று நினைத்து கார்த்தவீரியன் நீர்ப் பெருக்கைத் தடுத்துக் கொண்டிருந்த தன் ஆயிரம் கைகளையும் ஒருங்கே உயர்த்தினான். அணை ஒன்று உடைந்தால் வெள்ளம் எவ்வளவு பெருக்குடன் விரைவாக ஓடுமோ அவ்வளவாக ஆற்றுநீர் கரை புரண்டு ஓடிற்று. அந்த நீர் அவன் காமக்கிழத்தியர் பலரை இழுத்துச் சென்றது. உயிர் தப்புவதற்கு வழி தெரியாது அவர்கள் பெருங் கூச்சலிட்டுப் பதைத்தார்கள். கார்த்தவீரியன் கைகொட்டி நகைத்து அவர்களைக் கேலி செய்து தன்னுடைய ஆயிரங் கைகளையுங்கொண்டு சிலரைப் பிடித்துத் தூக்கியும், சிலரை வாரியெடுத்தும், சிலரைக் கரையில் வீசியும், சிலரை உடம்புடன் அணைத்தும், சிலரை நீருள் அமிழ்த்தியும், சிலரை நீரிலறைத்து வருத்தியும் விளையாடிக் கொண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தான். பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்த நருமதையாற்று வெள்ளம் சற்றுதூரத்தே இராவணன் பூசை செய்து கொண்டிருந்த சிவலிங்கத்தை மூடிற்று. இராவணனையும் அது இழுத்துச் செல்லப் பார்த்தது. இராவணன் அஞ்சாதவனாய்ச் சிவலிங்கத்தை எடுத்து இறுகப் பிடித்துக்கொண்டு கரையேறினான். கரையேறிய இராவணன் ஆற்றுநீர் இவ்விதம் பெருகிய காரணம் யாதென அறிவதற்காக கரைவழியே முன்னாக நடந்து சென்றான். அங்கே ஆயிரம் கைகளுடன் நிற்கும் ஒருவனைக் கண்டு அவனே கார்த்தவீரியன் எனத் தீர்மானம் செய்து கொண்டான்.

தானே வலிமை மிக்கவன் என்ற எண்ணமுடைய இருவருக்கும் காரணமில்லாமலே கோபம் உண்டாயிற்று. இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் முதலில் வாயில் வந்தபடி இகழ்ந்தனர். வாய்ப்பேச்சு கைச்சண்டையாக மாறியது. அது பெரிய கோரப் போருமாயிற்று. அவர்கள் ஒருவரை ஒருவர் கைகளாலும் கால்களாலும் அடித்தும் குத்தியும், உதைத்தும், ஒத்தியும் தாக்கத் தொடங்கினர். மல்யுத்தமும் தொடங்கிற்று. ஒருவரை ஒருவர் தூக்கி ஆகாயத்தில் எறிந்தனர். எறிபட்டு மேலெழும்பிக் கீழே விழுந்தவுடனே எழுந்து மறுபடியும் அவர்கள் மோதினர். பெரிய பெரிய மரங்களையும் பனை, தென்னை முதலிய நீண்ட மரங்களையும் சிறு தடிகளைக்கொண்டு அடிப்பதுபோல உபயோகித்தனர். மலைப் பாறையைப் பெயர்த்துப் பிடுங்கி ஒருவர்மேல் ஒருவர் எறிந்தனர். அக்கற்களைச் சிறு பந்துகளைப் பிடிப்பது போல மெல்லப் பிடித்து எறிபட்டவர் எறிந்தவர்மீது மறுபடியும் வீசினர்.

கோரச் சண்டையினால் தாக்கப்பட்ட அவர்களுடைய தலை, வாய், மூக்கு, முதுகு, மார்பு, கை, கால்களிலிருந்து இரத்தம் பீறிட்டு ஓடிக்கொண்டிருந்தது. அந்த நேரத்திலே இராவணன் கார்த்தவீரியனை நெருங்கி அவனுடைய கால்களிரண்டையும் பிடித்து வாரியிழுத்து விண்ணில் எறிந்தான். மேலே எறியப்பட்ட கார்த்தவீரியன் கீழே விழுந்த தருணத்தில் மறுபடியும் அவனைப் பிடித்து வீசுவதற்கு இராவணன் பிடித்த நேரத்திலே கார்த்தவீரியன் தனது ஆயிரம் கைகளாலும் இராவணனுடைய பத்துத் தலைகளையும் இருபது கைகளையும், கால்களையும் இறுகப் பிடித்துக்கொண்டான். இராவணனால் அசைய முடியாது போயிற்று. கார்த்தவீரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யன் இராவணனைப் பூமியிலே தள்ளி அவன் மார்பின் மேல் இருந்துகொண்டு அவனுடைய கைகளையும், கால்களையும் தனது சில கைகளாற் பிடித்துக்கொண்டு, மற்றக் கைகளால் அவனுடைய தலையிலும், முகத்திலும், கழுத்திலும், மார்பிலும், வயிற்றிலும், குத்தியும், இடித்தும், அடித்தும், மோதினன். இராவணன் களைப்பு மேலீட்டால் அறிவிழந்தான். அவனைச் சங்கிலியாற் கட்டிக் கார்த்தவீரியன் சிறையில் அடைத்து விட்டான். இராவணனுடைய கர்வம் ஒடுங்கி விட்டது.

புலத்திய மகாமுனிவர் இதையறிந்தார். இவர் இராவணனுடைய தந்தை வழிப்பாட்டனரல்லவா. அவருக்கு இராவணனை விடுவிக்கவேண்டும் என்னும் எண்ணம்உண்டாயிற்று. கார்த்தவீரியனிடம் அவர் வந்து இராவணனை விடும்படியும், இருவரும் வடக்கிலும் தெற்கிலும் சக்கரவர்த்திகளாயிருந்து நண்புடன் அரசு செய்யலாம் என்றும் புத்தி கூறினர். புலத்தியரைக் கோபம் மூட்டினுல் அவர் தன்னைச் சபித்து விடுவார் என்று கார்த்தவீரியன் நினைத்தான். தனது பயத்தை வெளிக்காட்டாமல் அவன் புலத்தியருடைய நண்பைப் பெறுவதற்காக இராவணனைச் சிறைநீக்கம் செய்தான். இராவணனும் தன் மமதை யொடுங்கி மரியாதையுடன் செல்கிறவன் போல் தன் தோல்வியை யாரும் அறிதல் கூடாது என்ற எண்ணத்துடன் தென்திசைக்குத் திரும்பிவிட்டான்.

இச்சம்பவத்தை —

''வீழ்ந்தவா னரக்கன்தன்னை விரைவின் யாப்புறுத்தி மன்னன்
தாழ்ந்துதன் சேனை வாழ்த்தத் தன்னகர் புகுதுமேல்வை
ஆய்ந்தநூற் கேள்விமிக்க புலத்தியன் அரசர் போற்றி
வாழ்ந்திடுகென்று வெய்யோன் வன்சிறை நீக்கினனே''

என்று கூர்மபுராணம் அ. இரா. மரபு அத் (105) கூறுகிறது.

''பார்க்கவர் என்ற முனிவர் கேகய நாட்டிற் கருகிலே தவஞ் செய்து கொண்டிருந்தார். அவருக்குப் பல மாணவர்கள் இருந்தனர். ஒருமுறை அவர் கோமேதக யாகம் செய்தார். பல முனிவர்கள் அந்த யாகத்தில் கலந்துகொள்ளுவதற்கு வந்திருந்தனர். கார்த்தவீரியன் இதையறிந்து யாகத்தைப் பார்க்க வந்திருந்தான். யாகம் முடிந்து வரும் நேரத்திலே கார்த்தவீரியன் நரி, புலி, ஆமை, கழுதை முத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிய வற்றைப் பிடித்துக் கொண்டு வந்து அவற்றை வெட்டி யாக குண்டத்திலே போட்டு எரியச் செய்தான். இதைக் கண்ட முனிவர்கள் வருந்தினர். பார்க்கவருக்கு அடக்க முடியாத கோபம் உண்டாயிற்று. அவனை அடித்துக் கொல்லவும் அந்த முனிவர்களால் முடியாது. முனிவர்களுக்குக் கோபம் வந்தவுடனே முனிவது (சாபமிடுவது) தான் அவர்களுடைய தொழில். எனவே கோபத்துடன் பார்க்கவர் கார்த்தவீரியனைப் பார்த்து ''இந்த யாகத்தைப் பழுதுபடுத்துவதற்கென விலங்குகளைப் பிடித்துக் கொண்டு வந்து வெட்டி யாக குண்டத்திலேயிட்ட உனது ஆயிரம் கைகளும் பிராமணன் ஒருவனால் அழியக்கடவது'' என்று சாபமிட்டார். யாகமும் ஒழிந்து விட்டது. யாக அட்சதையைப் பெறக் காத்து அங்கலாய்ப்புடன் இருந்த முனிவர்களும் தத்தம் இருக்கைகளுக்குச் சென்று விட்டனர். கார்த்தவீரியனும் இதுவும் நடக்கக் கூடியதோ என்ற கர்வத்துடன் தன் தலை நகருக்குச் சென்றுவிட்டான்.

**ஆபஸ்தம்பர்** என்னும் முனிவர் ஒருவர் வேறொரு காட்டிலே தவஞ் செய்து கொண்டிருந்தார். அவருடன் அவரைச் சேர்ந்த முனிவர்களும் மாணவர்களும் வசித்தனர். முனிவர்கள் தங்கள் தேவியருடன் காட்டைச் சேர்ந்த பல்வேறிடங்களிலே நல்ல புற்றரைகளின் நடுவிலேயுள்ள சோலைகளிலே தனித்தனி பர்ணசாலைகள் அமைத்து வாழ்ந்தனர். கார்த்தவீரியன் வேட்டையாடும் நோக்கத்துடன் இவ்விடத்துக்கு வந்தான். வந்தவன் முனிவர்களையும் அவர்கள் பத்தினிமாரையும் கண்டான். முனிவர்கள் ஆபஸ்தம் முனிவரிடம் யோகமார்க்கங்களைக் கற்றறிவதற்காகவும் யாகங்களில் பங்குபற்றுவதற்காகவும் செல்வது வழக்கம். அவருடைய பத்தினிமார் அருகில் ஓடிய நர்மதையாற்றிலே நீராடிச் சுத்தமான புனித நீரைக் குடங்களிலே மொண்டு தங்கள் இடங்களுக்கு வந்து பசுக்களைப் பராமரிப்பதிலும் சமையல் செய்வதிலும் நாட்களைச் செலவிடுவர்.

இப்பெண்மணிகளைக் கார்த்தவீரியன் கண்டான். மிருக வேட்டையிலே சென்ற அவனுடைய மனம் பெண் வேட்

டையிலே செல்லலாயிற்று. அவன் அப்பெண்மணிகளைக் கற்பழித்தான். தன் விருப்பிற்கு எதிர்த்து நின்றவர்களை வெட்டித் தனது வாளுக்கு இரையாக்கினுன். ஈற்றிலே இவன் ஆபஸ்தம்ப முனிவரையும் துன்புறுத்த எண்ணிச் சென்று அவருடைய யாகத்தை அழிக்க முற்பட்டான். அவர் அவனை நோக்கி ''உன்னை நான் கொல்வது எனக்குப் பாவமாக முடியும். ஆனுல் நீ செய்த கொடுமைகளுக்குப் பதிலாக உனது சிரம் பரசுராமனுல் அறுக்கப்படும்'' என்று சாபம் கொடுத்தார். எதிரிலே நின்ருல் அவர் தன்னை எரித்துவிடுவார் என்ற பயத்தினுல் கார்த்தவீரியன் அவ்விடத்தை விட்டகன்று போயினுன்.

ஆண்டுகள் சில சென்றபின் கார்த்தவீரியன் மறுபடியும் வேட்டையாடிச் சென்ருன். அப்பொழுது அவன் சமதக்கினி முனிவருடைய ஆச்சிரமத்திற்குச் சென்றதைப் பற்றிப் பின்னர் கூறுவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்தவீரியன் ரேணுகையைக் கண்டது

முனிவர்களுடைய யாகங்களை அழித்தும் அவர்களைக் கொன்றும் அவர்களுடைய மனைவியரைக் கற்பழித்தும், சிறையிட்டும் வந்த கார்த்தவீரியன் பின்னொருநாள் தன் பரிவாரங்களுடன் வேட்டையாடுவதற்குக் காட்டினுட் சென்றான். வேட்டையாடியபின் களைப்புடன் திரும்பித் தன்னூருக்கு வந்து கொண்டிருந்த கார்த்தவீரியன் நடுக்காட்டின் மத்தியிலே நருமதையாற்றங் கரையிலே சமதக்கினியாரும் இரேணுகையும் வதியும் இடத்துக்கு வந்தான்.

களைப்போடு வருகிற அரசனையும் பரிவாரங்களையும் கண்ட சமதக்கினியார் அவர்களை அன்புடன் வரவேற்றார். அவர் இந்திரனிடம் பெற்றுப் பூவுலகத்துக்குக் கொண்டு வந்த காமதேனு என்னும் பசு இங்கே ஓமதேனு என்னும் பெயருடன் அவரிடம் வளர்ந்து வந்தது. சமதக்கினியார் அப்பசுவைக்கொண்டு கார்த்தவீரியனுக்கும் அவனுடன்வந்தவர்களுக்கும் அறுசுவை உண்டி வழங்கப் பண்ணினார். எல்லோருக்கும் நல்ல உணவு வழங்கிய காமதேனுவைக் கவர வேண்டும் என்னும் எண்ணம் கார்த்தவீரியனுக்கு உண்டாகவே, முனிவர் வெளியிலே சென்ற தருணத்தில் கார்த்தவீரியனும் அவனுடைய பரிவாரங்களும் காமதேனுவைக் களவெடுத்துப் போக எண்ணினர். அவர்கள் அதை நெருங்கி கயிற்றாற் பிணிக்கத் தொடங்கவே, காமதேனு கோபங்கொண்டு சீறிப் பாய்ந்து அவர்களிற் பலரைக் கொம்புகளாலும், காலாலும் குத்தியும், மிதித்தும், மோதியும் கொன்றதுமன்றி, அவர்களைத் தொடர்ந்து துரத்தவும் தொடங்கிற்று. காமதேனுவுடைய உடலிலிருந்து பல ஆயிர வீரர்கள் தோன்றினார்கள். அவர்களும் கார்த்தவீரியனுடைய சேனைகளை வெட்டியும், குத்தியும் அழித்து விட்டனர். கார்த்தவீரியனும் அவனுடைய மக்களில்நால்வரும் பீதிகொண்டு ஓடினார்கள். இச்சத்தத்தை யாதென்று அறிய எண்ணிய இரேணுகை ஆச்சிரமப் படலையைத் திறந்து தலையை மாத்திரம் வெளியில் நீட்டி எட்டிப் பார்த்தாள். இதைக் கார்த்தவீரியன் கண்டான். இரேணுகையின் முகத்தைக் கண்ட கார்த்தவீரியன் தனக்கு நேர்ந்த அவமானத்தையும் செய்நன்றி கொன்ற தன் துரோகத்தையும் மறந்தான். இரேணுகையை எவ்விதமாகவாவது கவர வேண்டும் என்ற எண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணம் அவன் மனதிலே சுவாலையாகக் கொழுந்து விட்டு எரிந்தது. அவளை நேரே வலோற்காரமாகக் கவர முயன்றால் சமதக்கினியாருடைய சாபம் பெற்றுத் தான் இறந்துவிடவும் கூடும் என்று அவன் எண்ணினன். அதனால் அவன் இரேணுகையை வஞ்சித்து மருவ வெண்ணங் கொண்டான். அதி விடியற்காலையிலே, இரேணுகை நீராடச் செல்வதைக் கார்த்தவீரியன் அறிந்தான். மறுநாள்,

> **''மனையறக் கிழமையி னெழுகு மானிழை**
> **தனைமலர்க் குழலியோர் ஞான்று பொய்கையிற்**
> **கனைதிரைத் தடம்புனல் கவரப் போந்துழி**
> **வினைவழிக் கண்டனன் கார்த்தவீரியன்''**
>
> **(காஞ்சி. இரேணு 4.)**

அவளைக் கண்டவுடனே அவள் செல்லும் வழியருகிலே அழகிய உருவமுடையவனாக அவன் மாறி இரத்தினபரணங்களை அணிந்துகொண்டு நின்றான். எவருடைய முகத்தையும் ஏறெடுத்துப் பாராது பூமியையே நோக்கிக் கொண்டு செல்கிற இரேணுகாதேவியார் இவன் நின்றதைக் காணமல் தடாகத்துக்குச் சென்று திரும்பினுள். கார்த்தவீரியன் இதனால் மிகவும் துக்கமடைந்தவனாகி வேறொரு உபாயம் கண்டு பிடித்து அவளைத் தன்வசப்படுத்த வேண்டும் என எண்ணிச் சென்றான்.

இரேணுகை புலரிப்பொழுதில் நித்திரை விட்டெழுந்து, தன் கணவருடைய பாதங்களை வணங்கி விட்டுப் பக்கத்தில் நருமதையாற்று நீர் செறிந்த குளத்துக்குச் சென்று நீராடிய பின், குளத்திலேயுள்ள வண்டு மூசாத மலர்களைப் பிடுங்கியெடுத்துக் கொண்டும் தண்ணீரைப் பந்துபோலச் சுருட்டிச் சுமந்து கொண்டும் வீட்டுக்குத் திரும்பி வந்து வீட்டு வேலைகளைச் செய்யத் தொடங்குவாள். இதைக் கார்த்தவீரியன் அறிவான். அவன் அடுத்த நாள் அவள் நீராடப் போகும் வழியிலே மறுநாளும் அவளைக் காத்து ஒரு பக்கம் ஒதுங்கி நின்றான். போகும் வழியையன்றி வேறொன்றையும் பாராதவளாதலின், அவன் நிற்பதை இரேணுகை காணவேயில்லை.

காந்தருவ தேசத்திலே சித்திரசேனன் என்று ஒரு அரசனிருந்தான். அவன் அழகிற் சிறந்தவன். சித்திரசேனனுடைய உருவத்திலே தான் காணப்படில் இரேணுகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைக் காதலிப்பாள் என்று கார்த்தவீரியன் நினைத்தான். அதனால் அடுத்த நாள் அவன் கந்தருவனாகிய சித்திரசேன னுடைய உருவத்துக்குமாறி அதிகாலையிலே இரேணுகை நீராடும் பொய்கையின் மேற் பறந்து சென்றான். சரத்காலத் துப் பூரணசந்திரன், நீலமேற்கட்டி கட்டி அதில் முத்தும் கோமேதகமும் தூக்கிய பந்தல் போலக் காணப்பட்ட வானத்திலே, பால்போல்ஒழுகுகின்றகிரணங்களைச்சொரிந்து மெல்லெனப் பவனி வந்து கொண்டிருந்தான்.

பொய்கையிலே தாமரை, குவளை, செங்கழுநீர், அல்லி ஆம்பல், முதலிய மலர்கள் விரிந்து கொண்டிருந்தன. பக்கத் திலிருந்த அசோகு, சண்பகம், மந்தாரம், பாரிசாதம், சந் தனம், வில்வம் முதலிய மரங்களில் உள்ள மலர்களைத் தழு விய தென்றலிளங் காற்று, தடாகத்திலுள்ள மலர்களின் சுகந்த வாசனையையும் அணைந்து கொண்டும் அசைந்து கொண்டுமிருந்தது. நீர்நிலையிலே அலைகள் இல்லாததினால் வானமும் நட்சத்திரங்களும் சந்திரனும் கண்ணாடியிற் தெரி வதுபோல நீர்நிலைக்குள்ளும் தெளிவாகத் தெரிந்தன. இவ் வித இனியகாட்சிகளைக் கண்டு களித்த மனத்துடன் இரேணுகை நீரிலிறங்கிய நேரத்திலே நீருக்குள்ளே படக் காட்சி தெரிவது போல ஒரு காட்சி தென்பட்டது. கார்த்த வீரியன் சித்திரசேனனுடைய உருவத்துடன் தடாகத்தின் மேற் பறந்தான். அவன் பறக்கிற காட்சி தடாகத்து நீரி னுள்ளே தெரிந்தது. இரேணுகை இதைச் சிலகணம் வியப் புடன் பார்த்தாள். சற்று அறிவு தடுமாறினாள். மறுகணத் திலே சுய அறிவு வரப்பெற்றுத் தான் வேறொரு ஆடவ னுடைய உருவத்தைப் பார்த்தது பிழை என உணர்ந்தாள். மிகுந்த துக்கத்துடன் அவள் நீராடினாள். பூக்களைக் கொய் தெடுத்தாள். அதன்பின் வழமைபோல நீரைத் திரட்டினாள் நீர் திரண்டு வரவில்லை. எனவே, வாடிய முகத்துடன் அவள் பர்ணசாலைக்கு வரலானாள்.

அவள் வந்து கொண்டிருந்த போது சமதக்கினியார் துயிலெழுந்து விட்டார். அவர் முற்றத்துக்கு வரவும், இரேணுகை அங்கு வந்தாள். அவர்கள் ஒருவரையொரு வர் கண்டனர். இரேணுகை தன் பத்தாவுடைய பாதங் களில் வீழ்ந்து வணங்கினாள். சமதக்கினியார் இரேணுகை யின் முகம் அன்று வாடியிருப்பதை யுணர்ந்தார். அதன் காரணம் யாதென அவர் தமக்குள் ஆலோசனை பண்ணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞர். தவ வலிமையால் அவருக்கு அன்று அதிகாலையிலே தடாகத்திலே நிகழ்ந்த சம்பவங்கள் எல்லாம் தெரியலாயின. அதனால் அவர் கோபங் கொண்டார். அவர் தண்ணுவன், அணுவன், விசுவாவசு, பரசுராமன் ஆகிய நான்கு மக்களையும் வரும்படி அழைத்தார். அவர்களும் வந்தனர். சமதக்கினியார் தன் முதலாம் மகனாகிய தண்ணுவனிடம் தாய் பிற ஆடவனை இச்சித்த குற்றத்திற்காக அவளுடைய தலையை வெட்டும்படி கட்டளையிட்டார். தண்ணுவன் ''தாயை நான் கொல்லமாட்டேன்'' என மறுத்து அவ்விடத்தை விட்டு ஓடினான். சமதக்கினியார் இரண்டாம் மகனாகிய அணுவனை நோக்கி ''இவளை கத்தியால் வெட்டு'' என்று கூறினார். அவனும் தாயை வெட்ட விருப்பமில்லாதவனாக ஓடிவிட்டான். அவர் மூன்றாம் மகனாகிய விசுவாவசுவிடம் தாயை வெட்டச் சொன்னார். அவனும் அதற்கு விரும்பாது ஓடிவிட்டான். அவர் தன் கட்டளையைச் செய்யாத மக்கள் மூவரையும் நரிகளாக்கிக் காட்டில் அலையும்படி சாபமிட்டார். அவர்களும் நரிகளாயினர். சமதக்கினியாருக்கு கோபம் அதிகமாகி விட்டது. அவர் தமது கடைசி மகனாகிய பரசுராமனை அழைக்க அவனும் வந்தான். அவனிடம் வாளொன்றைக் கொடுத்து இதோ உனது தாய் நிற்கிறாள். இவள் இன்று காலை அயலவனான ஒருவனுடைய உருவத்தை நீர் நிலையிடையிற் கண்டு இச்சித்தாள். அதனால் அவளுடைய கற்பு நிலை தவறி விட்டது. இனி அவள் எனது மனைவியாயிருப்பதை நான் விரும்பமாட்டேன். ஆதலின் இவளைக் கொலைக்களத்துக்கு கொண்டு போய் தலை வேறு உடல் வேறாகும்படி வெட்டி விட்டுவா என்றுகூறினார். பரசுராமனுக்கு தகப்பனாருடைய குணமும் அவருடைய தவ வலிமையும் தெரியும். அவரைப் பிரீதிப்படுத்தினால் எல்லாவற்றையும் பெறலாம் என்று பரசுராமன் அறிவான். அப்படியிருந்தும் தாய்மேலுள்ள அன்பு அவனை வருத்தியது. இதைக் கண்ட இரேணுகை பரசுராமனை நோக்கி ''மகனே தந்தை சொல் மிக்க மந்திரமில்லை. அவர் சொல்லைத் தட்டாதே — பிருகு முனிவர் இட்ட சாபத்தினால் விட்டுணுவாயிருந்த நீ இன்று மனிதனைப் போல் யோசிக்கிறாய். அப்

---

குறிப்பு:— சிவபுராணம் மட்டும் இரேணுகை கார்த்தவீரியனை இச்சித்தாள் என்று கூறுகிறது. மற்ற புராணங்கள் யாவும் அவள் சித்திரசேனன் என்னும் பெயருடைய கந்தருவனை இச்சித்தாள் என்று கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி யோசியாதே. என்னை வெட்டிவிடு. அப்போ நானும் பதிவிரதையாவேன்'' என்று உருக்கமாகக் கூறினுள். அவன் தாயை அழைத்துக்கொண்டு கொலைக்களமுள்ள காட்டுக்குச் செல்லத் தொடங்கினுன். இதைக்கண்ட இருடிகளும் அவர்களுடைய பத்தினிகளும் ஒப்பாரிவைத்தனர். கண்ணீர் விட்டு அழுது இரங்கினர். சிலர் பரசுராமனையும் இரேணுகையையும் கொலைக்களத்துக்குச் செல்லவிடாது தடைசெய்தனர். பல பெண்கள் இரேணுகையைச் சூழ்ந்துகொண்டு அழுது புலம்பினர். பலர் அவளை எவரும் காணமுடியாதபடி சுற்றிமறைத்துக் கொண்டனர். பல ஆண்கள் பரசுராமனைச் சுற்றிக் கொண்டு அழுதனர், கெஞ்சினர், மன்றுடினர், அவனுடைய கையிலிருந்த வாளைப் பறித்தெடுக்கவும் சிலர் முற்பட்டனர். பரசுராமனே தான் தந்தையிட்ட கட்டளையை நிறைவேற்றப் போவதாகக் கூறி, அவர்களிடம் தன்னையும் தாயையும் விட்டு அகன்று போகும்படி வேண்டினுன். முனிவர்களாவது மற்றவர்களாவது பரசுராமன் கூறியதை ஏற்றுக்கொள்ளாது அவனுடன் வலோற்காரம் பேசவும் இரேணுகையை தாங்கள் வேறிடத்துக்குக் கொண்டு போய் காப்பாற்றவும் முயன்றனர். சாந்தமானவையும் நியாயமெனத் தனக்குத் தெரிந்தவைகளுமான பேச்சுக்களால் அவர்களைச் சம்மதிக்கப் பண்ண முடியாது என்று பரசுராமன் உணர்ந்தான். அதனுல் அவன் எல்லாரையும் அகன்று போகுமாறு எச்சரித்தான். அவர்கள் செவிசாய்க்கவில்லை. இதனுல் பரசுராமன் கோபம் கொண்டான். வாளை கையிலேந்திக் கொண்டு தாயை அழைத்துக் கொண்டு காட்டுக்குள் அவன் சென்றுன். கொலைக்களத்தடிக்கு அவனும் தாயும் மற்றவர்களும் வந்து விட்டனர். அப்பொழுது மற்றவர்கள் பரசுராமனை அடித்துக் கொலை செய்யவும் முற்பட்டனர். பரசுராமனுக்குக் கோபம் மிக மிக மூண்டு விட்டது. அவன் அங்கு நின்ற ஆண்கள் பெண்கள் எல்லாரையும் முதலிலே தன் வாளுக்குப் பலி கொடுத்தான். பார்த்த விடங்கள் எல்லாம் முண்டங்களும் தலைகளும் உருண்டன. இரேணுகை பரசுராமன் முன் தலை குனிந்து நின்று ''பரசுராமா, நேரமாகிறது, உன் தந்தை கட்டளையை நிறைவேற்று, நானும் உனக்குக் கட்டளையிடுகிறேன். கழுத்தால் என்னை வெட்டிவிடு. உன் புகழ் உலகம் முழுவதும் பரவும். நீ சிரஞ்சீவியாயிருப்பாய், உடனே வாளுக்கு என்னைப் பலி கொடு'' என்று வேண்டினுள். பரசுராமன் அவள் சொற்படி செய்யத் தயங்கினுன். தாய்ப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம் மேலிடவே பரசுராமன் தாய் சொன்னதைச் செய்யப் பின் நின்றான். அப்பொழுது இரேணுகை அவனை அன்புடன் நோக்கி "மகனே, பரசுராமா, உன் தந்தை சொன்னதை யும் நீ செய்கிறாயில்லை. எனது உரைகளையும் செவிமடுக்கிறா யில்லை. நீ விட்டுணு வம்சமாயிருக்கிறாய். கிருஷ்ணபரமாத் மாவாக நீ இருந்த போது அருச்சுனனுக்கு நீ உபதேசித்த வைகளை மறந்துபோனாய் போலிருக்கிறது. உலகத்திலே உயிர்கள் தாம் தாம் செய்த வினைகளுக்கேற்பப் பிறந்து உழல்கின்றன. அவைகளுக்கு முதலுமில்லை முடிவுமில்லை. அவற்றைப் படைக்கவும் முடியாது அழிக்கவும் முடியாது. ஒருவரால் ஒருவரைக் கொல்லவும் முடியாது. எந்த உயி ரும் கொல்லப்படுவதுமில்லை. பாம்பு பழமைபட்ட தன் தோலையுரித்தெறிவது போல உடல்களும் உயிர்களால் ஒதுக்கிவிடப்படுகின்றன. அழுக்குப்படிந்த பழைய உடை யை உரித்து எறிந்துவிட்டு வேறு உடல்களை மனிதர் எடுத் துக் கொள்கின்றனர். உன்னால் எனது உடலை வெட்ட முடியுமேயன்றி எனது உயிரை அசைக்கவே முடியாது. அப் படி எண்ணுவதே மித்தை — அப்படி எண்ணாதே. நீ உனக் கிட்ட கடமையைச் செய். உன் தகப்பன் கட்டளை மிகப் பெரியது. எனவே வேறு யோசனை பண்ணாது எனது கழுத் தை உனது கூரிய வாள் துண்டாக்கட்டும். நீ கடமையைச் செய்கிறாய் என்று எனக்கும் திருப்தி ஏற்படும்" என்று கூறி னாள். உடனே பரசுராமன் தாயுடைய தலையை வெட்டி வீசி விட்டான். மற்றவர்களுடைய தலைகளுக்கிடையிலே அது விழுந்தது. அவளுடைய உடலும் மற்றவர்களுடைய முண்டங்களுடன் கலந்து உருண்டது.

தாயைத் தனது வாளுக்கு இரையாக்கிய பரசுராமன் கொலைக்களத்திலிருந்து ஆச்சிரமத்துக்கு வந்தான். சமதக் கினியார் கோபந்தணிந்தவராக அவனைக் காத்து நின்றார். அவன் அவருடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கி அவ்விடத் திலே கையிலிருந்த வாளையும் வைத்து விட்டு எழுந்தார். அப்பொழுது முனிவர் தமது கோபத்தினால் விளைந்த தீமை களை நினைத்தார். நினைந்தவர்

"வெகுளியே யுயிர்க்கெலாம் விளைக்கும் தீவினை
வெகுளியே குணம் தவம் விரதம் மாய்க்குமால்
வெகுளியே யறிவினைச் சிதைக்கும் வெம்மைசால்
வெகுளியிற் கொடும்பகை வேறொன்று இல்லையால்"

*( காஞ்சி-இரேணு 17 )*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லிச் சொல்லி மனவேதனைப் பட்டார்.

சமதக்கினியார் அவனைக் கை கொடுத்துத் தூக்கி யெடுத்தார். அவர் அவனைப் பார்த்து ''நீ யான் சொன்ன படி நடந்திருக்கிறாய். உன்னுடைய தாய்க்குச் சிவபெருமானும் பார்பதியும் கொடுத்த வரத்தின் முதற்பாகம் இப் போ நிறைவேறிவிட்டது. இனி இரேணுகை மனிதப் பெண் ணாக வாழமுடியாது. நீயுமோ விட்டுணுவின் அம்சம் பெற்ற வன். நீயும் உலகத்திலே நிறைவேற்ற வேண்டிய செயல்கள் பல உள்ளன. காலந்தோறும் நீ அவற்றை உள்ளூர அறிந்து செய்வாய். என் சொல்லை நிறைவேற்றிய உனக்கு மூன்று வரங்கள் தர விரும்புகிறேன். அவற்றை என்னிடம் கேட் டுப் பெற்றுக்கொள்வாயாக'' என்றார். பரசுராமன் மகிழ்ந்து ''ஐயனே உங்கள் கோபம் தணிந்தருள்க. நரிகளாய் அலை கிற என் தமயன்மாரை மனிதர்களாக்குக'' இதுவே யான் கேட்கும் முதலாம் வரம்'' என்றான். சமதக்கினியார் நீ கேட்டபடி வரம் தந்தேன்'' என்றார். காட்டிலே நரிகளா யலைந்த சமதக்கினியாரின் மக்கள் மூவரும் மனிதராகி வந்து தந்தையை வணங்கினர். முனிவர் பரசுராமனிடம் உனக்கு விருப்பமான இரண்டாம் வரத்தைக் கேட்பாயாக என்றார். பரசுராமன் மகிழ்வோடு ''தேவரீர், தாங்கள் எங்கள்தாயின் மேல் வெறுப்பை நீக்கி முன்போல அம்மையாரைத் தங்கள் அன்பு மனைவியாராக ஏற்றருள்க. இதுவே எனக்கு வேண் டிய இரண்டாவது வரம்'' என்றான். முனிவர் இதைக் கேட் டுச் சிறிது சிந்தனை செய்தார். அவர் தாமே கொடுத்த வர மாதலின் மறுத்துரைக்கவும் அவரால் முடியாததாயிற்று. அவர் ''முன்போலவே ஆச்சிரமத்தில் இரேணுகை இருந்து வரலாம்'' என்று கூறினர். அவர் பரசுராமனிடம் சூலப் படை ஒன்றைக் கையளித்து ''நீ பகைவரைக் கொல்ல இது உதவுக'' என்று கூறி உனது மூன்றுவது வரம் யாது? என் றார். பரசுராமன் ''ஐயனே, என்றும் ஈசனை மறவாத சிந்தை எனக்கு வேண்டும்'' என்றான். சமதக்கினியாரும் அவ்வரத் தை மகிழ்வுடன் அவனுக்கு ஈந்தார். இச்செய்தியை உப தேசகாண்டம்

''ஒருவரம் வெகுளி நீவிட் டொழிதியென் றுரைத்தான் மற்றைத்
தருவரம் என்னை பீன்றுள் உய்ந்திடத் தகுதி யென்றான்
இருவரமொழிய மற்றென் றீசன திருதாட்போதில்
உருகுமன் பெனக்கு வேண்டும் தருதியென் றுரைத்து நின்றான்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அழகு ததும்ப உரைக்கிறது.

முனிவர் பரசுராமனைப் பார்த்து "நீ கொலைக்களத்துக்குச் சென்று உன் தாயின் தலையை உடலிலே பொருத்தி, இந்தக்கலசத்திலே உள்ள நீரைத் தெளிப்பாயாக அப்போது அவள் உயிர் பெற்றெழுவாள்'' என்றார். பரசுராமன் தகப்பனார் கொடுத்த நீர்க் கலசத்தைத் தலைமேலேந்திக் கொண்டு கொலைக்களத்துக்கு விரைந்தோடினான். அங்கே பிணக் குவைகளும், முண்டங்களும், தலைகளும் காட்சியளித்தன. அவன் முதலிலே தலைகளை ஒவ்வொன்றாகப் புரட்டிப் பார்த்தான். பல நூறு தலைகளுக்கிடையிலே அவன் தன் தாயுடைய தலையைக்கண்டு பிடித்தான். பெரிய மகிழ்ச்சியுடன் தலையையும் நீர்க்கலசத்யையும் எடுத்துக் கொண்டு கலந்தங்களை ஒவ்வொன்றாகப் புரட்டினான். அப்பொழுதும் தாயுடைய உடலை அவன் கண்டுகொள்ளவில்லை. அதனால் அவன் அங்கே கிடந்த பெண்ணுடல் ஒன்றைத் தாயின் உடலெனத் தெரிந்தெடுத்தான். அதைத் தூக்கி வந்து புல்லின் மீது படுக்க வைத்து அதனுடன் தாயின் தலையைப் பொருத்தினான். பின் தகப்பன் கொடுத்த கலசத்து நீரை வெட்டுவாயிலும் தலையிலும் உடலிலும் தெளித்தான். தெளித்தவுடனே உடலும் தலையும் ஒட்டிக்கொண்டன. உடனே பரசுராமன் அப்பெண்ணைத் தந்தையிடம் அழைத்து வந்து அவரை வணங்கி நின்றான். இரேணுகையும் அவரை வணங்கி நின்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்தவீரியன் திரும்பவும் இரேணுகையைக் கண்டது!

மேற்கூறிய செய்திகள் எல்லாம் நடைபெற்ற பின்பு நருமதையாற்றங்கரையிலே உள்ள சமதக்கினியாருடைய ஆச்சிரமம் முன்னை நாட்களைப்போலச் சீரும் சிறப்புமாக நடந்து கொண்டிருந்தது. ஆனாலும் சமதக்கினியாரும் இரேணுகையும் வெளியில் உள்ளவர்களுக்கு முன்பு, அங்கே முன்னாட்களில் வாழ்ந்த முனிவரும் பத்தினியும் போலக் காணப்பட்டனராயினும், அவர்கள் தங்களுக்குள்ளே முற்றுந் துறந்த முனிவர்களையொப்ப நடந்து வந்தனர்.

இப்படி ஒழுகி வரும் நாட்களில் ஒருநாள் கார்த்தவீரியன் இரேணுகையைக் கவர எண்ணித் துணைக்கு எவருமில்லாது ஆச்சிரமத்தை நோக்கி வந்தான். அந்த நேரத்திலே முனிவருடைய மக்கள் நால்வரும் வெளியே சென்றிருந்தனர். முனிவர் ஆற்றங்கரைக்குச் சென்று நீராடிவிட்டு வந்து கொண்டிருந்தார். கார்த்தவீரியன் மரங்களுக்கு மறைவில் நின்று ஆச்சிரமத்தைப் பார்த்தான். இரேணுகை அங்கே சமையல் செய்து கொண்டிருந்தாள். ஆச்சிரமத்தில் உதவிக்கு யாருமில்லை என்பதையறிந்த அவன் இரேணுகையை நெருங்கி வந்தான். அவனைக் கண்ட இரேணுகை பயந்து ஓலமிட்டாள். முனிவர் வருவதற்கிடையிலே கார்த்தவீரியன் இரேணுகையுடைய கரங்களைப் பிடித்திழுத்தான். அவள் வலிமையோடு திமிறித் தன் கரங்களை அவனிடமிருந்து விடுவித்துக்கொண்டு ஓடத் தொடங்கினாள். அவன் அவளைத் துரத்திப் பிடித்து இழுத்தான். அவள் தன்னுடைய கைகளாலும், கையில் அகப்பட்ட மரக்கட்டையினாலும் அவனை அடித்தாள். கார்த்தவீரியன் அவளை அசையவிடாது பிடித்துக்கொண்டு அவளுடைய மார்பில் மும்மூன்றுகளாக ஏழு முறை கைகளால் அடித்து விட்டான். அவள் அடிபட்டு அலறுகிற நேரத்திலே சமதக்கினி முனிவரும் வந்து விட்டார். அவரைக் கண்டவுடனே கார்த்தவீரியன் தன் கையிலிருந்த தண்டாயுதத்தினால் அவரை யடித்தான். முனிவரும் அவனுக்கு அடித்தார். சண்டை வரவரப் பெரிதாயிற்று. இதைக்கண்ட இரேணுகை அங்கேயிருந்த நீண்டவாளை எடுத்து வந்து சமதக்கினியாரிடம் கொடுத்தாள். அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை வாங்கிக் கார்த்தவீரியனுடைய ஆயிரங் கைகளேயும் ஆலமரத்தின் விழுதுகளே வெட்டுவதுபோல மளமளவென்று வெட்டி விட்டார். பல ஆண்டுகளுக்கு முன் கார்த்தவீரியன் பார்க்கவர் என்ற முனிவரைக் கோபமூட்டி அவருடைய சாபத்தைப் பெற்றபடியே ஆயிரம் கைகளேயும் இழந்துவிட்டான். அதனுல் அவன் கையில்லாத உடலுடன் அவ்விடத்தை விட்டு ஓடி விட்டான்.

காமதேனுவால் கொல்லப்பட்டவர்கள் போகப் பயந்து ஒளித்து ஓடிக் காட்டில் வதிந்து வந்த கார்த்தவீரியனுடைய மக்கள் நால்வரும் கார்த்தவீரியன் கைகளே இழந்து ஓடிவருவதைக் கண்டு அவ்விடத்துக்கு விரைந்து வந்தனர். கார்த்தவீரியன் தன்னேச் சமதக்கினி முனிவர் கரந் துணித்து விட்ட செய்தியைத் துக்கத்துடன் கூறினுன். இதைக்கேட்ட அவனுடைய மைந்தர் வெகுண்டனர். ''முனிவனே இதோ கொண்டு வருகிறேம்'' என்று கார்த்தவீரியனிடம் கூறி விட்டு முனிவருடைய ஆச்சிரமத்துக்கு வந்தனர். அங்கே முனிவர் நிற்பதைக் கண்ட இவர்கள் முனிவரை நெருங்கி அடிக்கத் தொடங்கினர். முனிவருக்கும் அவர்களுக்கும் இடையிலே நடந்த சண்டையிலே முனிவர் களைத்து விட்டார். அந்த நேரத்திலே கார்த்தவீரியனுடைய மக்கள் அவரை வெட்டிக் கொலை செய்து விட்டனர். சண்டை நடந்த நேரந் தொடங்கித் தனிமையிலிருந்த இரேணுகை பெரிய சத்தமிட்டு அழுதுகொண்டிருந்தாள். அவளுடைய அழுகுரலை வெகு தொலேவிலிருந்து கேட்ட அவளுடைய மக்களில் பரசுராமன் தவிர்ந்த ஏனைய மூவரும் ஆச்சிரமத்தை நோக்கி விரைந்து வந்தனர். பரசுராமன் இன்னும் வெகு தூரத்துக்குச் சென்று விட்டபடியினுல் அவனுக்கு ஒன்றும் தெரியாமலிருந்தது. அங்கே வந்த சமதக்கினியாரின் மக்கள் மூவரும் அங்கே நின்று கொண்டிருந்த கார்த்தவீரியனுடைய மக்களுடன் சண்டையிட்டனர். அச்சண்டையிலே கார்த்தவீரியனுடைய மக்கள் எல்லாரையும் முனிவருடைய மக்கள் மூவரும் கொன்று விட்டனர்.

சற்று நேரத்தின் பின் நைமிசாரணியத்துக்குச் சென்றிருந்த பரசுராமன் ஆச்சிரமத்துக்கு வந்துகொண்டிருந்தான். வரும்வழியிலே தன் தாய் ஓலமிட்டலறும் அழுகுரலே அவன் உணர்ந்தான். எனவே விரைவாக அவன் அங்கே வந்தான். சமதக்கினி முனிவர் இறந்து பிரேதமாய்க் கிடப்பதையும் பக்கத்திலே தனது தமையன்மாரும் தாயும் அழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பதையும் பரசிராமன் கண்டான். அவனுடைய மனதிலே உண்டான துக்கத்துக்கு அளவில்லை. வாய்விட்டு அழுது புலம்பிக் கொண்டு அங்கு நடந்தவைகளைப் பற்றி அவன் விசாரித்தான். மற்றவர்கள் நடந்தவற்றை அவனுக்கு எடுத்துரைத்தனர். கார்த்தவீரியன் தனது மூன்று கரங்களைக் கொண்டு தன்னை மார்பிலே ஏழுமுறை அடித்தான் என்று கூறிய இரேணுகை தன்னுடைய கரங்களால் தன் மார்பிலே ஏழுமுறை கார்த்தவீரியன் அடித்த விதமாக அடித்துக்காட்டி அழுதாள். இதைக் கண்ட பரசுராமன் அரச குடும்பங்கள் எங்கிருந்தாலும் அவற்றை இருபத்தொரு தலைமுறைகளுக்கு அழிப்பதாக அவளுக்கு முன் சபதஞ் செய்தான். இவைகள் நடந்தபின், பரசிராமன் கோபங் கொண்டு காட்டுக்குள் தன் தமையன்மாருடன் புகுந்து கார்த்தவீரியன் எங்குள்ளான் என்று தேடிச் சென்முன். ஒரு மலைக் குகையினுள் ஒளித்துக் கொண்டிருந்த கார்த்த வீரியன் இவர்கள் தூரத்திலே வருவதைக் கண்டான்.

அவன் தன்னுடைய மக்கள் சமதக்கினியாருடன் யுத்தம் செய்துவிட்டு வெற்றியுடன் வருகிருர்கள் என்று நினைத்து அவர்களைச் சந்திக்க விரைந்து ஓடிவந்தான். வந்தவனை பரசிராமனும் தமையன்மாரும் சுற்றி வளைத்துக்கொண்டனர். அப்பொழுது இரண்டு பகுதியினருக்கும் இடையிலே கொடிய சண்டை உண்டாயிற்று. கார்த்தவீரியன் தனது கால்களால் சமதக்கினியாருடைய மூத்த குமாரர் மூவரையும் உதைத்து விழுத்தி மிதித்து நசுக்கிக் கொன்று விட்டான். அவனுடைய உதைக்குப் பதில் உதைகளைப் பரசிராமனும் கொடுத்தான். கார்த்தவீரியன் ஓடிவந்து மலைபோலப் பரசிராமனில் மோதினுன். பரசிராமன் விலகி அவனை தட்டி வீழ்த்தினுன். அவனுடைய கால்கள் ஒன்றைத் தன் கால் ஒன்றுல் மிதித்துக் கொண்டு மற்றக் காலைத் தன் கைகளாற் பிடித்து உயர்த்தி அவனைப்பிளந்தான். பரசிராமன் பிழவுபட்ட இருகூறுகளும் மறுபடியும் ஒட்டிக் கொண்டன. பரசிராமன் கார்த்தவீரியனுடைய உடலை ஆகாயத்திலே எறிந்தான். அது கீழே விழுந்த போதும் அவன் சாகவில்லை. பின்னர் பெரிய மலைக் கல்லை எடுத்து அதனுல் அவனுடைய உடலிலும் தலையிலும் பரசுராமன் அடித்தான். காற்றடைத்த பந்து கிளம்புவது போல மலைக்கற்கள் அவனுடைய உடலிலும் தலையிலும் பட்டுக் கிளம்பின. பின் அவனைச் சிரச்சேதம் செய்வதைத் தவிரக் கொல்வதற்கு வேறு வழியில்லை என்ற முடிவுக்குப் பரசிராமன் வந்து விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நேரத்திலே இரேணுகை முன்னாட்களிலே சமதக்கினியாருக்குப் பரிசளித்ததும் பின்னாட்களில் அவர் தனக்குக் கொடுத்ததுமாகிய சூலப்படையின் நினைவு பரசிராமனுக்கு வந்தது. அவன் உறையிலிருந்து சூலத்தை உருவியெடுத்தான். அதனுடைய தோற்றத்தையும் பளபளப்பையுங் கண்ட கார்த்தவீரியன் ஏதோ சொல்வதற்கு வாயை அசைத்தான். வாயசைப்பைப் பரசிராமன் காணவில்லை. அவனுடைய சூலம் கார்த்தவீரியனுடைய மார்பைப்பிளந்து உயிரைக் குடித்து விட்டது. அவனுடைய சடலம் நிலத்திலே சிறிது நேரம் புரண்டது. கார்த்தவீரியனைக் கொன்ற பரசிராமனுடைய சினம் சிறிது ஆறினாலும் தமையன்மாரும் தந்தையாரும் இறந்த துக்கம் அவனை வருத்திக் கொண்டிருந்தது. அவன் திரும்பி விரைந்து ஆச்சிரமத்துக்கு வந்தான். அங்கே அவனுடைய தாயார் தலைவிரி கோலமாக அழுது புலம்பிக் கொண்டிருந்தாள்.

---

குறிப்பு:— பரசிராமன் கார்த்தவீரியனை முதலிற் கொன்றான் என்றும் கார்த்தவீரியனுடைய மக்கள் அதன்பின் சமதக்கினியாரைக் கொன்றனர் என்றும் சிவ புராணச் செய்திகள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாரியம்மன் வருபடலம்

கொல்லப்பட்ட சமதக்கினியாருக்கு ஈமக்கிரியைகள் செய்ய வேண்டும் என்று பரசிராமன் நினைத்தான். அவன் அடர்ந்த சோலையின் நடுவிலேயிருந்து சுடுகாட்டுக்குத் தந்தை யாருடைய உடலைக் கொண்டு சென்றான். சந்தன விறகினுற் சிதை மூட்டி அதன் மீது சமதக்கினியாருடைய உடலைக் கிடத்தினான். வேதவிதிப்படி நடத்த வேண்டிய ஈமக்கிரி யைகளைச் செய்தபின் பரசிராமன் சிதைக்கு நெருப்பு வைத்தான். நெருப்பு கொழுந்து விட்டெரியத் தொடங்கி விட்டது. பரசிராமன் நெருப்பு அவிந்து ஒழியும் வரை காத்து நில்லாது நீரோடை யொன்றைத் தேடி நீராடப் போய் விட்டான்.

சமதக்கினி முனிவருடைய உடலைப் பரசிராமன் எரிய விடுவதற்கு எடுத்துச் சென்ற பின் இரேணுகை தனக்குள் ஆலோசிக்கலானாள்.

''அல்லலே பெண்ணெனப் பிறத்தல் ஆங்கதின்
அல்லலே யிளமையிற் சிறத்தல் ஆங்கதின்
அல்லலே கட்டழ குடைமை ஆங்கதின்
அல்லலே யிரீவலர் சார்பின் ஆகுதல்''
(காஞ்சி. இரே:- 31)

என்று பிரலாபித்தாள்.

உலகத்திலே பெண்ணுகப் பிறந்தவளுக்கு அவளுடைய பெற்ருரே முதல் தெய்வம். அவள் விவாகம் முடித்தபின் அவளு டைய கணவனே அவளுடைய கண்கண்ட தெய்வம். உயர் குலப் பெண்கள் கணவன் இறந்தவுடனே இறந்து போவார் கள், அல்லது உடன் கட்டையேறி யுயிர்விடுவார்கள். இனி மேல் யான் உயிர் வாழ்வதில் என்ன பயனைப் பெறுவேன். உலகம் நான் உயிர் விடாமல் இருப்பதையறிந்தால் என்னை இகழ்ந்து ஒதுக்கிவிடும். ஆகவே எனது கணவருடன் உடன் கட்டையேறி உயிரை விட்டு மறு உலகத்துக்கு அவருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வதே முறையானது. வேதங்களும் மனுநீதி நூல்களும் இப்படியே கூறுகின்றன. இவ்வாறு ஆலோசித்த இரேணு கை, தனது கணவரை மகன் பரசிராமன் எடுத்துச்சென்ற வழியை அறிந்து கொடிய வனவிலங்குகள் நிறைந்த வனத்தி னூடாகச் சுடலைக்கு வந்து சேர்ந்தாள். அவள் அங்கே வந்த நேரத்திலே சமதக்கினியாருடைய உடலில் தீ மண்டி யெரிந்தது. பரசிராமனுவது வேறு எவராவது அவ்விடத் தில் இல்லை. இதுவே நல்ல சந்தர்ப்பம் என எண்ணிய இரேணுகை எரிந்து கொண்டிருந்த தீப்பிளம்பினுள்ளே துள்ளி ஏறித் தனது கணவருடைய உடலைக் கட்டிப் பிடித் துக் கொண்டாள். அவளையும் தீ பிடித்து எரிக்கத் தொ டங்கியது. அவள் குளிர்ந்த நீர் வீழ்ச்சியில் நீராடுபவள் போல மகிழ்வுடன் தீச்சுவாலைக்குள் காணப்பட்டாள். தீயின் வெப்பத்தை அவள் சிறிதும் உணரவில்லை. அவளு டைய ஆடையைத் தீப்பிடித்துக் கொண்டது.

சமதக்கினியாருடைய தவத்தையும் இரேணுகையின் கற்பின் திறத்தையும் தேவர்கள் அறிவார்கள். இந்திரன் சமதக்கினியாரும் இரேணுகையும் எரிவதையறிந்து இரே ணுகையுடைய உடலம் வேகுமுன் அவளைக் காப்பாற்ற எண்ணினுன். அவன் வருணனிடம் இரேணுகையுடையஉடல் வெந்து அவளுடைய உயிர் போகுமுன் அவளைக் காப்பாற் றுக என்று வேண்டினுன். வருணன் ஏழு மேகங்களையும் அழைத்து ''உடனே நீங்கள் சென்று இரேணுகையை எரிக் கும் தீயைச் சோணமாரியாக மழையைப் பெய்து அவித்து விடுக'' என்று கட்டளையிட்டான். மேகங்கள் விரைந்து சென்றன. பகீரதன் பூமிக்கு அழைத்து வந்த கங்கையின் பிரவாகம் போல அவை மழை பொழிந்தன. ஈமத்தீயும் அவிந்தது. இரேணுகை சிதையிலிருந்து வெளியே வந்தாள். அவள் உடுத்திருந்த ஆடை முற்றுக எரிந்து போனதால் தன்னந்தனியே சுடுகாட்டில் உடையின்றி நின்ருள். தனது உடலை மறைப்பதற்காக உடுப்பதற்கு ஒரு சிறிய துணிதா னும் அவளுக்குக் கிடைக்கவில்லை. எனவே சுடலையில் நின்ற வேப்ப மரங்களில் இருந்த தளைகளைப் பிடுங்கினுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விடத்தில் இருந்த கொடிகளால் வேப்பந்தழைகளை அரையிலும், மார்பிலும், தலையிலும் சுற்றிக் கட்டிக் கொண்டாள். அவளுடைய உடலிலே நெருப்புச் சுட்ட இடங்கள் முழுவதும் கொப்புளங்கள் உண்டாகிவிட்டன. அவளுடைய முன்னைய உருவமும் நிறமும் கருகி மாற்ற மடைந்தமையால் எவரும் அவளை இரேணுகை என்று மதிக்க முடியாதிருந்தது. வனத்திலேயுள்ள சுடுகாட்டிலே தன்னந் தனியளாக நிற்பது அவளுக்குப் பயமாயிருந்தது. கார்த்த வீரியனும் அவனுடைய மக்களும் தனக்கும் தன்குடும்பத் துக்கும் வனத்திடையே புரிந்த தீச் செயல்களை நினைத்த போது அவளுடையமனம் திகில் அடைந்தது. உச்சிப்பொழு தும் கழிகிறதினால் அவள் காட்டை விட்டுச் செல்வதற்குத் தீர்மானித்தாள். வடதேசத்தவர்களே அவளுடைய குடும் பத்துக்கு அதிக தீமை செய்தனர் என்று உணர்ந்த இரேணு கை தென்திசை நோக்கி நடந்தாள். நாலைந்து காவத தூரம் நடந்த பின்பு அவள் வனத்தின் அருகில் இருந்த சேரி ஒன் றைக் கண்டு அங்கே செல்லலாயினள். அப்பொழுது பெரும் மழை பெய்தது. தூரத்திலே அவள் வருவதைக் கண்ட சேரி மக்கள் வேப்பந் தழைகளைச் சுற்றி உடுத்து வருகிற அவளைப் பார்த்து இவள் மனித வகுப்பைச் சேர்ந்தவளோ அல்லது தேவதைகளில் ஒன்றோ என்று எண்ணி அவளுக்கு அருகே செல்வதற்கும் பயந்து தூரத்திலே நின்றனர். அவர்களுடைய பயத்தை உணர்ந்த இரேணுகை அவர்களைப் பயப்பட வேண் டாம் என்றும் தான் மனிதப் பெண் என்றும் கூறி அவர்களு டைய அச்சத்தை நீக்கினாள். பின்பு அவள் அவர்களை நெருங் கித் தனக்கு உள்ள கடும் பசியை எடுத்துக் கூறித் தன் பசி யைத் தணிப்பதற்கு உணவு ஏதாவது தரும்படி வேண்டி னாள். அதனைக் கேட்ட சேரிமக்கள் ''அம்மணி, நாங்கள் தீண்டப்படக் கூடாத சாதியார். புலையர் வம்சத்தைச் சேர்ந் தவர்கள். நீங்களோ உயர்ந்த பார்ப்பன வம்சத்தையோ அரச வம்சத்தையோ சார்ந்தவர்கள் போலக் காணப்படு கிறீர்கள். உயர்ந்த சாதியினர் இழிந்த சாதியினரிடத்திலே உண்ண மாட்டார்கள். அப்படி உண்ணுவது பாவம் என்று சாத்திரங்களும், வேதங்களும் கூறுகின்றன. அவ்விதம் உண் டால் பிராயச்சித்தம் செய்து முடிக்கவேண்டும். ஆனால், நெருப்பிலே வேகாத பச்சரிசி, மா, வெல்லம், இளநீர் பான கம் ஆகியவற்றைப் புதிய மட்பாண்டத்திலே கொணர்ந்து அவள் முன் வைத்து வணங்கி அவற்றை அவள் உண்ணும் வரை தாங்கள் அவளைக் காணக்கூடாத தூரத்துக்குச் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்து விட்டனர். இரேணுகை அச்சேரிப் புலையர்கள் கொடுத்ததும் நெருப்பிலே வேகாததுமான உணவை அருந்திப் பசிதீர்ந்து அன்றிரவை அந்தச் சேரியிலே கழித்தாள். அன்றிரவு முழுவதும் பெரும்மழை பெய்தது. பல நாள் இருந்த வரட்சி நீங்கி மரஞ் செடிகள் தளிர் விட்டுப் பூத்துக் குலுங்கின.

மறுநாள் அதிகாலையிலே அவள் அவர்களுக்கு நன்றிகூறி விடைகொடுத்து வேறூர் செல்லப் புறப்பட்டுத் தென்திசை நோக்கி நடக்கலானாள். சில காவதூரம் சோலைகளுக்கூடாக நடந்து வந்தவள் பிறிதொரு சேரியின் எல்லைக்கு வந்தாள். மழையும் பெய்யத் தொடங்கியது. அவளைக்கண்ட அச்சேரி மக்கள் இவளை ஒரு தேவதை என நினைத்துப் பயந்தனர். அவள் தன் கையை அமர்த்தி அவர்களைச் சிறிதும் பயமின்றியிருக்கும்படி வேண்டினாள். அவளுடைய உடலை மூடி உடுப்பதற்கு அவள் அவர்களிடம் ஆடையொன்று தரும்படி கேட்டாள். அவர்கள் புதிய துணியில் துவைத்தெடுத்த வெண்ணிறச் சேலையை அவளுக்குக் கொடுத்தனர். அவள் அதை உடுத்துக் கொண்டாள். பின்னர் தனது பசி தீர்க்க உணவு தரும்படி கேட்டாள். அவர்கள் தாங்கள் ஏழை வண்ணார் எனவும், புதிய உணவு இல்லை எனவும், தங்களிடம் உள்ளது முந்திய இரவில் சமைத்து உண்டபின் மீந்துள்ள சோற்றிலே தண்ணீர் விட்டுப் புதிய மட்கலத்திலே வைத்திருக்கிற பழஞ் சாதமே எனவும் அவளுக்குக் கூறினர். அவள் பழஞ் சாதத்திலேயுள்ள தண்ணீரை வடித்துத் தரும்படி கேட்டாள். அவர்கள் மகிழ்வோடு அதைக் கொடுத்தலும் அவள் அதைக் குடித்தாள். பழஞ் சோற்று நீரைக் குடித்தபோது அவளுடைய உடலில் இருந்த பெரிய கொப்புளங்கள் சுருங்கத் தொடங்கி விட்டன. அவர்கள் பூமியை மெழுகிக் கோலமிட்டு அதன் மேல் வெண்ணிறச் சீலை விரித்து அதன்மேல் வேப்பிலைகளைப் பரப்பி அவளை அதன்மேல் இருக்க வைத்தனர். பின் அறுகு, பூக்கள், மஞ்சள் நீர், பழம், பாக்கு, வெற்றிலை, கற்கண்டு, சர்க்கரை முதலியவற்றை அவள் முன் படைத்துப் பூசை செய்தனர். வேப்பிலையையும், மஞ்சளையும் அரைத்து அவளுடைய நெருப்புக் காயங்களிற் பூசினர். அவை சுருங்கிச் சுகமாகி வந்தன. அவர்கள் ஒரு சிறிய பர்ணசாலையைக் காட்டு மரங்களினாற் கட்டி ஓலையால் வேய்ந்து அவளுடைய கொப்புளங்கள் ஆறும் வரையில் அங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேயே தங்கியிருக்கும்படி அவளைப் பரிந்து வேண்டினர். அவளும் அதற்குச் சம்மதித்துச் சில காலம் அங்கே யுறை வாளாயினள். அவள் அங்கே வரும்வரை இருந்த வரட்சி நீங்கிப் பெருமழை பெய்தது. சேரி மக்களுடைய மகிழ்ச்சிக்கு அளவில்லை.

அவர்கள் அவ்வூரிலே ஒரு சிறு கோயிலமைத்து அதில் அம்மையாரை வசிக்கும்படி வேண்டினர். அம்மையாரும் அதற்கு இசைந்தாள். வேனிற்காலம் தொடங்கிற்று. தென்றல் வீசத் தலைப்பட்டது. சோலைகளில் இருந்த மரங்கள் துளிர் விட்டுப் பூத்துக் காய்க்கத் தொடங்கின. மல்லிகை, முல்லை, இருவாட்சி, சண்பகம் முதலிய கொடிகளும் அசோகம், வில்வம், மகிழ், கோங்கு முதலிய மரங்களும் பூத்துக் குலுங்கின. மரங்களிலே சிறியவும் பெரியவுமான புட்கள் முட்டையிடுவதற்குக் கூடு கட்டின. தேன் கூடுகளிலிருந்த தேன் துளிகள் பனி பெய்வதுபோல விழுந்து கொண்டிருந்தன. குளங்களிலும், வயல்களிலும் நீர் நிரம்பி வழிந்தது. தாமரை, நீலோற்பலம், குமுதம், அல்லி, செங்கழுநீர் முதலிய நீர்ப்பூக்கள் நீர்நிலைகள் முழுவதும் பூத்துக் காட்சியளித்தன.

அம்மன் ஒரு தெய்வம் என்றும், அவள் மழைமாரி பெய்வித்தலால் மாரியம்மன் என்றும் அவர்கள் பெயர் சூட்டினர்.

அச்சேரியிலும் அடுத்த சேரிகளிலும் உள்ள குடும்பப் பெண்கள் புதுக் குடத்திலே நீர் கொண்டு அம்மனுக்குக் குளிப்பாட்டி, 'அம்மா! கோபமும் வேகமும் தணிந்து குளிர்வாயாக' என்று வேண்டி நின்றனர். அதனுடன், வேகாத பொருட்களாகிய பழம், இளநீர் பானகம், சர்க்கரை, மா ஆகியவற்றைப் படைத்து அவற்றை உண்ணும்படி வேண்டினர். சில பெண்கள் தாலாட்டுப் பாடினர். சிலர் அம்மனைக்கொண்டு பாடிவிளையாடினர். பூரணை நாளன்று அம்மனுக்கு விழாவெடுத்தனர். இளங் கன்னிப் பெண்களில் பலர் கூடி வாழ்த்துப் பாடினர். அவர்கள் அம்மானையாடிய நேரத்திலே அவர்களுடன் ஒருவராக அம்மனும் சேர்ந்து விளையாடினாள். அதன்பின் நீர்நிலைக்கு எல்லாரும் சென்று நீராடினர். அப்பொழுது, "அம்மா, கோபந் தணிந்தருள்க!" உங்களுடைய உடலும் உள்ளமும் குளிர்ந்தருள்க, எங்களுடைய ஊரிலே மாதம் மும்மாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெய்க, வைசூரி முதலிய நோய்கள் இவ்விடத்தில் வராது அருள் பொழிக'' என்று குளிர்த்திப் பாடல்கள் பாடினர். இப்படி நடந்தவுடனே மழை பெய்தது. நிலம் குளிர்ந்தது. இதனுல் அம்மனுக்கு மாரியம்மன் என்றும் முத்துமாரியம்மன் என்றும் பெயர் வரலாயிற்று. இங்கே அம்மனுக்கு வழிபாடு நடந்த நேரத்திலே பரசிராமனுக்கு நடந்தவற்றை நோக்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரசிராமன் தவஞ் செய்த படலம்

சமதக்கினியாருக்கும் இரேணுகைக்கும் பிறந்த நால்வருள் கடைசி மகன் பரசிராமன் என்பதும், இவன் விஷ்ணுவின் அம்சம் பெற்றவன் என்பதும் முன்னர் கூறப்பட்டுள்ளது.

பரசிராமனுக்குத் தாய் தந்தையர் இராமன் என்று பெயரிட்டனர். இதன்பின் கூறப்படும் சம்பவத்திலே சிவபெருமானிடம் பரசு என்னும் ஆயுதத்தை இவன் பெற்று அதைத் தன்னுடன் எடுத்துச் சென்று அரச குடும்பங்களை அழித்த பின்புதான் இவனுக்கு பரசிராமன் என்னும் பெயர் வந்தது. பழைய நூலாசிரியர்கள் இவனைப் பரசுராமன் என்று — அவன் பரசு (கோடரி) என்னும் ஆயுதத்தைப் பெறமுன் உள்ள சரித்திரத்தில் எழுதினர். அதைத் தொடர்ந்தே இதுவரையும் பரசுராமன் என்று எழுதப்படலாயிற்று. மேலும் இராமன் என்று இராமாயணம் கூறும் அரசகுமாரனிலும் வேறாகத் தெரிவதற்காகவும் பரசுராமன் என்ற பெயரை முன்னோர் உபயோகித்தனர் என்று எண்ண வேண்டியிருக்கிறது. இது நிற்க,

சமதக்கினியாருடைய சரீரத்தை நெருப்பிலிட்ட பரசிராமன் கிழக்கு நோக்கிச் சென்றான். அவனைக் கொலைத் தோஷம் (பிரமஹத்தி) பிடித்து ஆட்டத் தொடங்கிற்று.

அது அவனை ஆறு குளங்களில் தள்ளி விடும்; செல்லும் வழியை மறைத்து விடும்; மலையிலே ஏற்றும்; பாதாளத்திலே தள்ளும்; பன்றி நாய்கள் போல முன்னும் பின்னும் ஓடிச் செல்லும்; யானைபோல் முழங்கிக்கொண்டு முட்ட வரும்; மரங்களின் மேல் ஏற்றும்; தன் தந்தை தாயாரையும் அது மறக்கச் செய்து விட்டது. இவ்விதமான எண்ணரிய இடர்களை (ஹத்தி) கொலைத் தோஷம் பரசிராமனுக்குச் செய்தது. ஒருநாள் பரசிராமன் பாமுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் ஒன்றிலே படுத்துறங்கினான். களைப்பு மேலிட்டால் அவன் ஆழமான உறக்கத்திலே விழ்ந்து விட்டான்.. அவன் அப்போ ஒரு கனவு கண்டான். அக்கனவிலே அவனுடைய தந்தையாகிய சமதக்கினியார் தோன்றினார். அவர் கனவிலே அவனிடம், "பரசிராமா! உனக்கு மரணம் என்பதே இல்லை; நான்கு யுகத்திலும் நீ வசிப்பாய்; இப்பொழுது கார்த்தவீரியனைக் கொன்ற (ஹத்தி) தோஷம் உன்னை அலைக்கிறது; உன்னை விட்டு அத்தோஷம் நீங்குவதற்கு நீ தவஞ் செய்து சிவபெருமானைக் காண வேண்டும்; அரசு வம்சத்தை இருபத்தொரு தலைமுறைகளுக்கு அழிப்பதாகச் சபதம் செய்திருக்கிறாய்; தவஞ் செய்து சிவபெருமானைக் கண்டு அவனிடத்திலே உன்னைப் பிடித்த (ஹத்தி) தோஷம் நீங்குமாறு வரம் பெற்றபின் அரச பரம்பரையை இருபத்தொரு தலைமுறை அழிப்பதற்கான ஆயுதம் ஒன்றையும் பெற்றுக் கொள்; இப்படிச் செய்வதால் உன் எண்ணம் எல்லாம் சித்திக்கும்" என்று கூறி மறைந்தார்.

கனவு கண்ட பரசிராமன் விழித்தெழுந்தான். கனவு நனவாகி விடும் என்பதில் அவனுக்கு நம்பிக்கையுண்டாயிற்று. எனவே தவம் செய்வதற்கு உரிய வசதியான இடம் எது என யோசனை செய்தான்.

தன்னுடைய தாய் பிறந்த இடமும் தெய்வீக ஆற்றலுடைய சிந்து நதி வளம்படுத்துகிறதுமாகிய பாஞ்சாலம் நல்ல இடமென்று அவன் உணர்ந்தான். உணர்ந்தவன் வடதிசை நோக்கி நடந்தான். பலநூறு காவத தூரம் நடந்து

---

குறிப்பு: பரசு + ராமன் = பரசுராமன்
(இது வடமொழி முறை)
பரசு + இராமன் = பரசிராமன்
(தமிழ்மொழி முறை)
காஞ்சி புராணத்திலே இவன் பெயர் பரசிராமன் என்று எழுதப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்து நதிக் கரைக்கு வந்தான். சிந்து நதி இமயமலையில் இருந்து உற்பத்தியாகி அதன் ஒரு பக்கத்தை வளைந்து பின் தென்மேற்குத் திசை நோக்கி ஓடிக் கடலுடன்சேர்கிறது. சிந்து நதியின் ஐந்து கிளையாறுகளும் புண்ணிய நதிகளாக விருந்த போதிலும் அவற்றுள் ஒன்ருகிய சரஸ்வதியாறு மிகுந்த தெய்வீகத்தன்மை வாய்ந்தது என்பது அவனுக்குத் தெரியும். அதனுல் அவன் சரஸ்வதியாற்றங்கரை வழியாக நடந்து தவஞ் செய்வதற்கு வசதியான இடத்தைத் தேடினுன்.

அந்த வனத்தின் அழகுகளுக்கு எல்லையில்லை. அது முன் நாட்களில் நாடாகவிருந்த இடம். பரசிராமன் வந்த நாட்களில் வானளாவும் காடுகள் அங்கு வளர்ந்திருந்தன. அவற்றினூடாகச் சூரியகிரணம் பூமியில் விழுவது அருமை. வனத்திலே நெடிய பசுங்கொடிகள் மூடிப் பூத்துக், காய்த்துப் பழுத்துத் தொங்கின. தேன் கூடுகள் நிரம்பிய மரங்களிலே பலவித பறவையினங்கள் கூடுகட்டி வாழ்ந்தன. குரங்குகள் பழங்களையுண்டு களித்தன. பூமியிலே பசு, மான் முதலிய சாந்தமான விலங்குகள் வசித்தன வேடர், குறவர், தபோதனர் வசித்த சேரிகள் இடையிடையே இருந்தன. இந்தப் பெரிய வனத்தின் பாங்கரிலேயுள்ள பசும் புல் வளர்ந்து நிழல் நிறைந்தவிடத்திலே பரசிராமன் தவம் செய்யத் தொடங்கினுன். வெயில், காற்று, மழை, குளிர் என்பனவற்றை அவன் கவனியாது சிவபெருமானுடைய திருவடிக் கமலங்களிலே மனஞ்செலுத்தியபடி அசையாது பல நாட்கள் நின்று தவஞ் செய்தும் சிவத்தையவன் காணவில்லை. பின்பு அவன் ஒற்றைக் காலில் நின்று கொண்டு வானத்தைப் பார்த்தபடியே பல நாள் தவஞ் செய்தான். அப்பொழுதும் சிவபெருமான் அவனுடைய தவத்துக்கு இரங்கினுரில்லை. பார்வதி தேவியார் பரமனை நோக்கித் "தேவரீர், பக்தி பண்ணுகிறவர்களைத் தேடிச் செல்லுகிற தங்கள் திருவடிகள் பரசிராமனிடம் செல்லாதிருப்பது ஏன்? அவன் கடும் தவமிழைக்கிருன். தங்கள் சித்தம் இரங்கி அவனுக்கு வரமளிப்பீர்களாக" என்று வேண்டினுள். அதற்குப் பரம்பொருள் "தேவி, பரசிராமனுடைய தவம் மிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக வலியது. அவனுக்கு அருள்புரியவேவேண்டும். ஆனால் அவனிடம் தான் பிராமணனுடைய மகன், அரசகுமாரத்தியின் குமாரன் என்ற சாதித் திமிர் இருக்கிறது. அவரவர் கன்மத்துக்கு ஏற்ப மனிதர் பல சாதியிற் பிறக்கிறார்கள். ஆயினும் அவர்களுடைய ஆன்மாக்கள் எல்லாம் தொடக்கத்தில் ஒரு தன்மையன என்று தெரியாதா? பரசிராமனுக்கு இந்த அனுபவமும் அறிவும் கொஞ்சமும் இல்லை. அதனால் அவனுடைய சாதிக் கருவத்தை அகற்றி நல்வழிப்படுத்த வேண்டும். அதற்காக நாம் வேடருடைய உருவத்துடன் செல்ல வேண்டும் புறப்படு'' என்று கூறினார்.

உடனே வேடர் குடும்பம் ஒன்று உருவெடுத்தது. அண்ட சராசரங்கடந்த தனிப் பெரும் ஒளிப்பிளம்பாகிய சந்திரசேகரப் பெருமான் வேடரானார். அவருடைய கையில் வில்லும் கண்ணியும் முதுகில் அம்பறாத் துணியும் தொங்கின. தோலாற் சமைந்த பாதகுறடு பாதத்தையும், மரவுரி அரையையும், புலித்தோற் சட்டை மார்பையும் அழகு செய்தன. கங்கை, பிறை பாம்புகளைத் தாங்கிய சடாமுடி அவிழ்ந்து விரிந்து முருங்கக்காய்கள் போலத் தலையில் இருந்து தொங்கியசைந்தது. அண்டசராசர மனைத்தையுமீன்ற கன்னிப் பெண்ணாகிய பராபரை வேடுவிச்சியானார். அவளுடைய கைகளிலே கண்ணப்பன் எய்தது போன்ற செத்த பன்றியும், முயலும், உடும்புந் தூங்கின. முருகன் கணபதியென்னும் வேட்டுவச் சிறுவர்களில் ஒருவர் தாயின் கையைப் பிடித்து நடந்தனர். மற்றவர் தகப்பனுடைய வார்க் கச்சையைப் பிடித்து நடந்தார். வேதங்களும் ஆகமங்களும் ஆகிய நாய்கள் இவர்களைச் சுற்றி வளைந்து சென்றன.

தூரத்திலிருந்த தன்னை நோக்கி வந்து கொண்டிருக்கிற வேடனையும் வேட்டுவிச்சியையும், சிறுவர்களையும் பரசிராமன் கண்டான். அவர்களுடைய தோற்றமும் நாற்றமும் அவனுக்கு வெறுப்பை உண்டாக்கின. அவன் அவர்களுடன் வாய் திறந்து பேசாது அகன்று போகும்படி கையினாற் சமிக்

---

குறிப்புகள்:— பரசிராமன் தவஞ் செய்த இடம் விந்தய மலைக்கு வடக்கிலும் இமயமலைக்கு தெற்கிலும் இருந்த காடு என்றும் சில புராணங்கள் கூறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞைசெய்தான். பரசிராமனுடைய சமிக்ஞையைக்கவனியாத வேடன் நாய்களையுவனிடம் ஏவினான். அவை அவனைச் சுற்றிக் கொண்டன. வேடப் பையன்கள் நெருங்கிச் சென்று அவனுடைய கைகளைப் பிடித்தனர். பரசிராமன் கோபம் கொண்டு அவர்களிடமிருந்து கையை இழுத்தான். அவர்கள் "'காற்படி பிச்சைக்கு காதவழி போகிற பார்ப்பான் நீயல்லையோ பயந்து போனாயா? ஐயோ பாவம்'' என்று கேலி செய்தனர். வேட்டுவிச்சி, நெருங்கிக் கடிக்க வருகிற நாய்களை விலக்கினாள். பரசிராமன் தன்னை நெருங்கி வந்து கொண்டிருந்த வேடனை நோக்கி, ''என்னைத் தொடாதே, நீ வேடன் தீண்டாச் சாதியான்; யான் பார்ப்பான்; என்னைத் தீண்டுவது உனக்குப் பாவமாக முடியும்'' என்றான். வேடன் பதிலாக ''பாவம் உனக்குள்ளதோ? எனக்குள்ளதோ சொல்? நீ எனது உறவினன் போலத் தோன்றுகிறாய்'' என்றான். பரசிராமன் பதிலாக ''யாது கூறினை நான் சமதக்கினி முனிவருக்கு இரேணுகை வயிற்றிலே பிறந்த பிராமணன் நீயோ வேடர் குலத்திலே பிறந்த புலையன்'' என்றான். இதைக் கேட்ட வேடன், ''அன்பனே, நீ நல்ல செய்தியைக் கூறி விட்டாய். பெரிய மகிழ்வுடையோம் கேட்பாயாக. உனது தாய் இரேணுகாதேவி எனது மனைவிக்கு நெருங்கிய உறவினள். அதனால் நானும் உனக்கு இனத்தவனாகி விட்டேன். இதைக் குறித்துச் சிறிதும் ஐயமுற வேண்டாம்'' என்று கூறினான்.

இச்சம்பவத்தைக் காஞ்சிப் புராணம் மிக அழகிய ஓவியமாகப் பின்வருமாறு கூறுகிறது.

> ''கழிய வெனக்குற வாயினை ஐயமி லைக்கண்டாய்
> இழிவற நின்னை யளித்த விரேணுகை வென்பாள்என்
> பழுதறு சீர்மனை யாட்கினி யாளாம் பரிசாலே
> விழுமிய நீயுமெ னக்கினி யாய்கரண் எனவிண்டான்''

வேடன் கூறியதைக் கேட்ட பரசிராமன் வெகுண்டு ''இவ்வாறு சொல்லிய உனது நாக்கை யறுக்க வேண்டும் புலையா அப்புறம் போடா'' என்றான். இதைக் கேட்ட வேடன் ''தாயின் தலையை வெட்டிய கொடிய பாதகன் நீயல்லையோ; கேட்பார் பார்ப்பார் இல்லையென்று எண்ணி எனது நாவை அறிவேன் என்றாய். அது உன்னால் முடியுமா?'' என்றான். பரசிராமனுக்குக் கோபம் விஞ்சியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தண்டாயுதத்தை எடுத்து வீசினன். வேடனுடைய மூத்த மகன் அதைப் பிடித்துப் பூமியில் அடித்து நொருக்கி விட்டான். வேடன் பரசிராமன் மேல் நாய்களை ஏவினன். பரசிராமன் நாய்கள் துரத்தப் பயந்து ஓடினன். வேட னும் அவனைத் துரத்திச் சென்ருன். வேடன் தனது வலக் கரத்தினல் தபசியின் கரத்தைப் பிடித்தான். வேடனு டைய கைப்பட்டவுடனே பரசிராமனுடைய உடல் குளிர்ந்து புளகம் நிறைந்தது. அதனை உணர்ந்தாலும், இழிருன் தீண் டியதனல் பரசிராமன் துக்கமும் கோபமும் கொண்டு "ஐய கோ என் தவமும் யானும் அழிந்தொழிய வேண்டி வந்த தே" என்று வருந்தி வேடனை நோக்கிப் "புலையனே உனது தலைக்கு இறுதி வந்து விட்டது" என்று கூறினன். அதுகேட்ட வேடன் "யான் பசுவைக் கொன்று தின்னும் வேடன் என் பது மெய்யே. ஆனல் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத் துப் பால் அருத்தி வளர்த்த தாயை வெட்டிய பாதகனல்ல வா நீ. ஆதலால் நீ என்னிலும் இழிந்த பிறவியில் வந்த வன், நீ எனக்கு அடிமையாகி வரவேண்டும். நான் உனக்கு ஆண்டானவேன் என்ருன். இதைக் கேட்ட பரசிராமன் அடிபட்ட பாம்பைப் போலச் சீறி,

"அண்ணலை மறக்கை யோச்சி யடித்தனன் அமரர் தேரும்
புண்ணிய முதல்வன் தானும் பொருக்கென முனிவன் தன்னை
திண்ணிய விரண்டு கையுஞ் சிக்கென ஒருகைபற்றி
கண்ணறக் கொடிறு வீங்கப் புடைத்தனன் கமலக்கையால்"

பரசிராமனுடைய தாடை வீங்கிவிட்டது. பற்கள் அசைந்து வருத்தின. அவனுடைய கண்கள் மின்மினிப் பூச்சிகள் பறப் பதுபோன்ற தோற்றத்தைக் கண்டன. பின்னர் இருவரும் பெரிய சண்டையிட்டனர். வேட்டுவிச்சி வேடரிடம்,

"இறைவ, நின்னடிக்கீழ் அன்பினி னியவன் வருந்தா வண்ணம்
பொறை கொளப் புடைத்தி என்ருள் புனிதனும் மெலிதிற் றுக்கத்"

தொடங்கினன்.

ஒவ்வொருவரும் தமக்கே வெற்றி என்று போரிட்டனர். வேடன் மிகவும் கோபங் கொண்டவன் போலக் காட்டிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்பானைக் காலையும் கையையும் கட்டி நிலத்திலே போட்டு உருட்டினான். நாய்கள் அவனை முகந்தன. பையன்கள் இருவரும் விலாவொடுங்குமாறு நகைத்தனர். பரசிராமன் அறிவு சோர்ந்து விட்டான். அந்த நேரத்திலே தென்றலிளங்காற்று மெல்லெலன வீசத் தொடங்கிற்று. அக்காற்று மேனியிற் பட்டதும் பார்ப்பான் அயர்வு நீங்கித் தனக்கு நிகழ்ந்த இன்னலை நினைந்து நினைந்து அழுதான். தன் குலப் பெருமை கெட்டு விட்டதே என்று வருந்தினான். கடைசியாகச் சிவபெருமானை நினைந்து

''படியா தியபற் பலதத்துவமாய்க்
குடிலாந் தமகன்ற குருஉச் சுடரே
முடியா முடிவே முதலா முதலே
அடிகே ளடியே னுன்னடைக் கலமே''

(காஞ்சி. பரசி 47)

"உமையா ளொருபால் உடையாய் முறையோ
இமையா சலலில் லிறைவா முறையோ
அமையா விடமுண் டமைவாய் முடையோ
தமைநா டினர்தந் தலைவா முறையோ"

(காஞ்சி. பரசி 48)

என்று பலபடி பாடித் துதித்து இறைவனருளை வேண்டினான்.

இறைவன் மனமிரங்கித் தன் பழைய வடிவமெடுத்தான். இறைவியும் பராபரையாகினாள், முருகன் சேவலங் கொடியும் வேலும் பிடித்து மயில் மேற் தோன்றினான். கணபதி மூஷிக வாகனனாய்க் காட்சியீந்தான். பரசிராமன் மகிழ்ச்சிப் பிரவாகத்தில் நீந்தினான். பலநூறு முறை பாதங்களை வணங்கினான். சிவபெருமான் அவனை இரண்டு கைகளாலும் அணைத்து அருள் சொரிந்து ''அன்பனே, நீ விரும்பியது யாது? கூறுக'' என்றார். பரசிராமனும் தேவதேவே,

''என்தாதையாகுஞ் சமதக்கினி யென்னும்
வென்றான் தனையே கயவேந்தன் அருச்சுனன்தான்
கொன்றான் அவனைக் குலத்தோடறக் கொன்றழித்து''

எந்தைக்கு அவர்களுடையஇரத்தத்தினால்தர்ப்பணம்செய்து முடிக்க வரந்தருக'' என்றான். அது கேட்ட பரம்பொருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியேயாகுக என்று வரமீந்து தன்கையிலிருந்த பரசு ஆயுதத்தையும் கொடுத்து இன்று வரை இராமன் என்று பெயர் பெற்ற நீ இன்று தொடக்கம் பரசிராமன் என்ற பெயரால் வழங்கப்படுவாய். மேலும் நீ மரணமின்றி வாழ் வாய் என்று அவனுக்கு நடக்கவிருக்கும் பல செய்திகளைக் கூறினர். அதன்பின் நீ பாலிநதியில் மூழ்கிக் காஞ்சிப்பதியிலேஎனக்கென ஒரு இலிங்கம் அமைத்து வாழ்வாய்'' என்று கூறிப் பரையுடனும் மக்களுடனும் ஆகாயத்தில் மறைந்தார். பரமசிவனையும், பராபரையையும்,முருகனையும் கணபதியையும் ஒருங்கே கண்ட காட்சியை அவனால் மறக்க முடியாதிருந்தது. அவன் இனிமேற் செய்வதென்ன வென்று ஆலோசனை செய்தான். தனது தந்தைக்கு அந்திய கிரியைகள் செய்யவேண்டும் என்ற முடிவுக்கு வந்தவனாய்த் தாங்கள் முன் வசித்த இடத்திற்கு வந்தான். ஆச்சிரமம் பாழடைந்து போனதைக் கண்டு வருந்தினன். அதன்பின் தன் தாய் போன இடம் எது என்று பலரிடம் விசாரித்தான். விசாரிக்கப் பட்டவர்கள் எல்லாரும் இரேணுகையம்மையார் சமதக்கினியாருடன் உடன்கட்டையேறி எரிந்து போனார் என்று கூறினர்கள். இதைக் கேட்ட பரசிராமன் தாய்க்கும் சேர்த்து அந்தியக் கருமங்கள் செய்ய நினைத்துத் திரும்பி வந்தவழியே சென்று பின் மேற்காய்த் திரும்பிச் சென்றான்.

University of ...
04 JAN 2022
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரியம்மன் வரம் பெறு படலம்

இரேணுகாதேவியார் தென் திசைக் கிராமங்களிலே திரிந்து பாமரமக்கள் வணங்க அவர்களுக்கு வந்த நோய்களைக் குணப்படுத்தி வந்தாள் என்று மாரியம்மன் வரு படலத்திலும் இரேணுகையின் சங்கதியை யறியாது பரசிராமன் தவம் செய்து கங்காதரரிடமும் தேவியாரிடமும் வரம் பெற்றதை இதன் முன் உள்ள படலத்திலும் கூறினோம். இனி மாரியம்மன் என்று மக்களால் அழைக்கப் பட்ட இரேணுகாதேவியாருடைய செயல்களை நோக்குவாம். அவளை நாமும் இனி மாரியம்மன் என்றே அழைப் போம்.

மாரியம்மன் என்று அழைக்கப்படுகிற இரேணுகாதேவி யாருக்குச் சமதக்கினி முனிவருடைய எண்ணம் பிறந்தது. அதனால் அவர் விந்தய மலையிலிருந்து மேற்கு நோக்கி யோடி வருகிற நருமதை யாற்றங்கரையிலே, தான் சம தக்கினியாருடன் வாழ்ந்து நான்கு மக்களை யீன்று வளர்த்து யாகம் புரிந்து விருந்தோம்பி இன்புற்றிருந்த ஆச்சிரமத்தி லே, சமதக்கினியார் திரும்பவும் உயிர் பெற்று வாழக் கூடும் என எண்ணியவளாய், அவருடைய பாதகமலங் களுக்குப் பூசை செய்யும் நோக்கத்துடன் வந்தாள். ஆச் சிரமம் பாழடைந்திருந்ததைக் கண்டு அவள் வருந்தினாள். ஓமதேனு என்னும் காமதேனு தன் சாபம் நீங்கி மறுபடியும் தேவலோகத்துக்குப் போனதைத் தன் ஞான சக்தியினா லறிந்தாள். அதன் பின் அவள் சமதக்கினியார் எரிந்த சுடலை யை நோக்கி நடந்து வந்தாள். அவரை எரித்த விடத்திலே அவருடைய சாம்பல்தானும் இல்லாதிருந்தது. பெரிதும் மனம் நொந்தவளாக அவள் கயிலை மலைக்குச் சென்று சிறிய ஓர் தவச்சாலையை ஆக்கி அதன்கண் இருந்து சிவபெரு மானையும் உமையம்மையாரையும் நோக்கித் தவஞ் செய் தாள்.

நாட்கள் ஆண்டுகளாகப் புரண்டு ஓடின. அதுவரை யும் பொறுமையோடிருந்த உமாதேவியார், சிவபெரு மானை நோக்கித், ''தேவரீர்! மாரியம்மன் தவஞ் செய்து கொண்டிருக்கிறாளே, அவளுக்கு அருள் புரியலாகாதா'' என்று கேட்டார். அந்த நேரத்திலே மாரியம்மன் கம்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றன்மேல் இரும்பாலான கூர் உள்ள கம்பியின்மீது ஒற் றைக் காலையூன்றி நின்று, கண்கள் வானத்தை நோக்கிய படி கண்ணீர் ஒழுக, இரண்டு கைகளையும் தா மரை மொட்டைப்போற் குவித்துக்கொண்டு நின்று பின்வருமாறு கூறி அழத் தொடங்கினாள்.

எம்பெருமானே, அப்பனே கருணைக்கடலே தேவர்க ளைக் காப்பாற்ற நஞ்சுண்ட கண்டனே, உலகத்தின் முதலே, என்னைக் காப்பாற்று. அம்மையே, தேவி அடி யாளைப் பெற்றவளே எனது இடுக்கண் தீர்க்க நீயும் என் அப்பனுமன்றி இவ்வுலகில் யாருளர்?

"ஐயனே யடியேனையும் காத்தருள் அசலத்
தையலே சக முழுவது மளித்திடும் தாயே
உய்யுமா றென்னைக் காத்தருள் உமைச் சரணடைந்தேன்
பொய்யர் சிந்தையி லகப்படீர் போற்றி யென்றிரந்தாள்"
காஞ்சி — இரே. 28

இவ்வாறு மாரியம்மன் கண்ணீர் விட்டுப்
புலம்பி வேண்டுதலைக் கண்ட

"அம்மைய யப்பராய் அகிலமும் புரந்திடும் கருணைச்
செம்மலார் நகை முகிழ்த் தெழத் திருவுள மகிழ்ந்தே
எம்மை வேட்ட வை யியம்புதி இமயமீன் றளித்த
கொம்மை மென்முலை உனக்கு அவைதரும்"
காஞ்சி — இரே. 29

எனக் கூறக்கேட்டு மகிழ்ந்தாள். உமாதேவியார் மாரி யம்மனிடம் உனக்கு யாது வேண்டும் என வினவினார். அதற்கு மாரியம்மன் தாயே, யான் உம்முடன் வதிய வேண்டும் என்றார். இதுகேட்ட சிவபெருமான், மங்காய் நீ முற்பிறப்பிலே உமாதேவியாருடைய அம்சமாயிருந்தாய். ஏழைப் பாமர மக்களுடைய துன்பத்தைக் கண்ட நீ கிராம தேவதையாகி, அவர்களுடைய துன்பத்தை நீக்க விரும்பி னாய். மேலும் கெட்டவர்களைத் துன்புறுத்தி நல்வழிப் படுத்துவதற்கும் வரம் கேட்டாய். அவற்றை நாங்களிரு வேரும் விரும்பியளித்தோம். அதன்படி நீ மனித உட லெடுத்தாய். அவ்வுடலின் மாசுகள் யாவும் அக்கினியால் எரிக்கப்பட்டுப் போயின. உனக்கு உள்ள காயங்கள் யாவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது அழிந்து போகும். நீ தெய்வப் பெண்ணுவாய். மேலும் உனது தலை மாத்திரமே நீ பிறந்த அன்று உள்ளது போல் உள்ளது. இப்போ உள்ள உனது உடல் வேறு ஒரு பெண்ணுடையது. இவ்வுடலும் பரசுராமன் உனக்கு இறுதிச் சடங்கு செய்யும் நாட்களில் பிரிந்து போம். உனது தலை மாத்திரம் உலகத்தவர்களுக்குத் தெரியும். அதற்கு ஆராதனை செய்து வழிபடுவதும் உன் முழு உருவத்திற்கும் ஆராதனை செய்து வழிபடுவதும் ஒன்றே.

அதில் வித்தியாசமேயில்லை, இனி உனக்கு வேண்டிய வரம் என்னவென்று சொல்'' என்று கேட்டார்.

இதைச் செவிமடுத்த மாரியம்மன், ''முழுமுதலே வேத ஆகமங்களைப் படித்த அறிவாளிகளுக்கு மாத்திரமே உம்மை வழிபடும் திறம் தெரியும். சேரிகளிலுள்ள பாமர மக்கள் தேவரீரை அறியமாட்டார்கள். அவர்களுக்கு இன்னல் செய்வோரை வருத்தி, என்னை வழிபடுவோருக்கு யான் அருள்புரிய விரும்புகிறேன். கெட்டவர்களை அழிக்க ஒரு ஆயுதமும் நல்லவர்களை வாழ்விக்க அருள்பாலிக்கும் திறமும் எனக்கு வரங்களாகத் தரவேண்டுகிறேன்'' என்று சிவபெருமானிடம் கேட்டார். சிவபிரானும் இதற்குச் சம்மதித்துத் தீயவர்களுக்கு வேதனை செய்யும் முத்துக்களை உமையம்மையார் கொடுக்க வாங்கி மாரியம்மனிடம் கொடுத்தார். மாரியம்மன் அதை வாங்கி யெடுத்துக் கொண்டு இம் முத்துக்கள் யாது செய்யும் என்று அறிய விரும்புகிறேன் என்று சிவபெருமானிடம் கேட்டார்.

சிவபெருமான் ''மாரியே, நான் சொல்வதைக் கவனமாகக் கேட்பாயாக. உமாதேவியாருடைய சக்திகளில் ஒன்றுன உன்னை நாங்கள் வரங் கொடுத்து உலகத்துக்கு அனுப்பின செய்தியை நீயறிவாயன்றே — உலகிலே தீயோர் பெருகி நல்லோரை வருத்தும் காலத்திலே தீயோரை அழிக்கவும் நல்லோரை ஆதரிக்கவும் நாம் காலத்துக்குக் காலம் தேவர்களை யனுப்புவோம் — அவர்கள் மனித உருவத்தில் தென்படுவார்கள்; தேவ உருவத்திலே மறைந்து நிற்பார்கள். அது போலவே நீ மனித உருவத்திலே உலகத்திலே தோன்றிக் கார்த்தவீரியர்களாகிய கொடியவர்கள் அழிவதற்குக் காரணியாயிருந்தாய். உன் வயிற்றிலே விட்டுணுவைப் பரசிராம உருவத்திலே பிறப்பித்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனும் துட்டர்களை அழித்து விட்டான். நீ உனது மனித உருவம் நீங்கித் தேவதை உருவமாகி விட்டாய். முன்னர் நீ கேட்டபடியும் இன்று கேட்கிறபடியும், இந்த முத்துக்களை எடுத்துக் கொண்டு பூமியைச் சுற்றி வா. துட்டர்களுக்கு இந்த முத்துக்களை எறிந்தால், அவை நீ சமதக்கினியுடன் எரியில் வீழ்ந்து மழை பெய்ததினால் நெருப்பு அவிந்த போது, உனது உடலிலே விழுந்த கொப்புளங்கள் போல கொப்புளங்கள் உண்டாகிக் காயமாகும். அவற்றினால் உண்டாகும் புண்ணுக்கு, நீ சுடுகாட்டிலே உடையில்லாத நேரத்திலே அணிந்த வேப்பிலையே மருந்தாகும். வேப்பிலையை அரைத்துப் பூசியும் வேப்பிலையைக் கொண்டு தடவியும் புண்ணைச் சுகமாக்கலாம் என்று கூறினார்.''

மாரியம்மன் சிவபெருமானிடம் வரம் வாங்கிய நேரத்திலே பரசிராமன் தாய்க்கும் தகப்பனுக்கும் அந்தியக் கிரியை செய்யத் தொடங்கியதால் அதைப்பற்றிக் கூறிவிட்டுப் பின் மாரியம்மன் முத்து விளையாடியதைக் கூறுவாம்.

University ... 04 JAN 2022 LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரசிராமன் பெற்றேருக்கு அந்தியக் கிரியைகள் செய்த படலம்

சமதக்கினியார் எரிந்து போனூர். உடன்கட்டையேறிய இரேணுகையும் எரிந்து சாம்பலாகி விட்டாள் என்று மற்றவர்கள் கூறக்கேட்ட பரசிராமன் அவர்களுக்குரிய அந்தியக் கிரியைகளைச் செய்ய ஆலோசித்தான். அவன் செய்த சபதப்படி அரசர்களுடைய பரம்பரையை வெட்டி அவர்களுடைய இரத்தத்தை நதிபோல ஓடவிட்டு, இரத்தம் நிறைவதற்கு ஐந்து மடுக்களை உண்டாக்கி அவற்றிலே இரத்தத்தை நிரப்பி, அந்த இரத்தத்தை இரண்டு கைகளாலுமள்ளித் தர்ப்பணம் செய்தல் வேண்டும். இதற்காகத் தந்தையார் கொடுத்த மழுவையும் எடுத்துக்கொண்டு பரசிராமன் இமயமலை வரைக்கும் சென்று வடநாட்டிலுள்ள அரசர்களை வென்று, அவர்களையும் அவர்களுடைய இருபத்தொரு சந்ததியினரையும் இனத்தவர்களையும் சிறையிலடைப்பித்தான். பின் பதினுயிரக் கணக்கான அரச குலத்தவர்களை ஒரே நாளில் கண்டதுண்டமாக வெட்டிச் சரித்தான். குருக்ஷேத்திரத்துப் பாரத யுத்தத்திலே இறந்தவர்களுடைய இரத்தம் ஓடியதுபோல இந்த அரச சந்ததியினதும இரத்தம் ஆறுகள்போற் பிரவாகம் எடுத்து ஓடிற்று. அந்த ஆறுகள் எல்லாம் ஐந்து மடுக்களையும் நிரப்பின. அந்த மடுக்கள் சமந்தபஞ்சகம் என்று பின் நாட்களில் அழைக்கப்பட்டன. பரசிராமன் அந்த மடுக்களில் நிறைந்த இரத்தத்தை இரண்டு கைகளாலும் அள்ளியெடுத்துப் பெற்ருருக்குரிய அந்தியக் கிரியைகளில் தர்ப்பணம் செய்தான்.

இதன்பின் பரசிராமன் தந்தை தாயரை உயிரோடெழுப்ப எண்ணினுன். முனிவர்களுடைய முறைப்படி அந்த யாகத்துக்குரிய இருபத்தொரு நாட்கள் செல்ல வேண்டும். பரசிராமன் இருபத்தொரு நாட்கள் யாகக் கிரியை செய்யத் தொடங்கினுன். யாக கிரியைகள் ஐந்து நாட்கள் இடையூறு இன்றி நிகழ்ந்தன. ஐந்தாவது நாள் கிரியைகள் முடிந்தபின் எல்லாரும் நித்திரை செய்யச் சென்று விட்டனர். பரசிராமனும் ஆழ்ந்த உறக்கத்திலே வீழ்ந்து விட்டான். நடுச்சாமத்திலே புலியொன்று தன்மேல் பாய்வதாக அவன் கனவு கண்டு பயந்து நித்திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலேயே, ''அம்மா! அப்பா!'' என்று அலறத் தொடங்கினன். எல்லாரும் விழித்துக் கொள்ளவே பரசிராமனும் விழித்துக் கொண்டான். யாக குண்டத்திலே அந்த நேரத்திலே அவனுடைய தாயின் தலை தெரிந்து, தாய் உயிர்த்து விட்டாள் என்று எண்ணிய பரசிராமன் வெளியிலே தெரிந்த தலையைப் பிடித்து இழுத்தால் தாயுடைய உடல் முழுவதும் வெளியில் வந்து விடும் என்று நினைந்து தலையை இரண்டு கைகளாலும் பிடித்து இழுக்கவே, அவளுடைய தலை மாத்திரம் வந்தது. அத்தலையிலே எண்ணெய் பூசிச் சீவித் தேன் ஒழுகும் மலர்களை அணிந்த கூந்தலும், ஒளி விடும் இரத்தினங்கள் பதித்த மகரகுண்டலம் விளங்கும் செவிகளும் அம்பு போன்ற கூர் விழிகளும், பவளத் துண்டம் போன்ற இதழ்கள் உள்ள வாயும் இருந்தன. பரசிராமன் துக்கம் கொண்டவனாகத் தலையை அவ்விடத்திலே வைத்து விட்டுத் தாத்தாத்திரேயரிடம் சென்று நடந்தவற்றைச் சொன்னான். அவர், ''இருபத்தொரு நாட்கள் கிரியைகள் பூர்த்தியாகுமுன் ஐந்து நாட்களில் நீயிழுத்து விட்டதினல் தலை மாத்திரம் வந்தது. இதுவும் வினைப் பயனே. உனது தாயுடைய தலையை வேறொருவருடைய உடலில் ஒட்டிக்கொண்டு வந்து உனது தந்தையாரிடம் முன்னுளில் நீ காட்டினய். இன்று உன் தாயுடைய தலையைப் பெற்றுக் கொண்டாய். மற்றப் பெண்ணுடைய உருவம் மறைந்து விட்டது. உனது தாய் கைலை மலைக்குச் சென்று கொண்டிருக்கிறாள். சில நாட்களின் பின் நீ அவளைத் தெய்வ உருவத்தில் காண்பாய். சேரிகளில் உள்ள பாமர மக்கள் உன் தாயுடைய தலையை வைத்துப் பூசை செய்வார்கள். உனது தகப்பன் சத்திய உலகம் சென்று விட்டார். இனிமேல் நீ உன் விருப்பப்படியும் உனக்கு இறைவன் உபதேசித்த முறைப்படியும் ஒழுகலாம்'' என்றார். பரசிராமன் அந்த அளவிலே கிரியைகளை முடித்து விட்டு நருமதை நதி விழுகிற மேற்குக் கடல் ஓரமான ஊர்களைப் பார்க்க ஆசையுடையவனாகவும் அங்குள்ள அரச வம்சங்களை இருபத்தொரு தலைமுறைக்கு அழிக்க உள்ளமுடையவனாகவும் அவ்விடமிருந்து சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரியம்மன் உலாவியற் படலம்.

சிவபெருமானிடத்திலும் உமாதேவியாரிடத்திலும் வரத்தை வாங்கிய முத்துமாரியம்மன், தான் வாங்கின முத்தை ஒருவருக்காவது எறிந்து பார்க்க விரும்பினுள். அப்போது அவளுக்கு முன்னே சிவபெருமானே இருந்தார். ஒரு பிடி முத்து எடுத்து அவள் அவற்றைச் சிவபிரான் மீது எறிந்தாள். சிவபெருமானுடைய உடலிலே முத்துப் போன்ற கொப்புளங்கள் எழுந்தன. அவர் அவளை நோக்கி,

''ஈஸ்வரியே முத்து மகாமாரியம்மனே
பருமார்பில் முத்தையள்ளிப்பாராம லேயெறிந்தாய்
பட்டமுத்துச் செய்வருத்தம் தாங்கலரிது
வரைபோலும் கொங்கைமின்னே மாலிமயன் புத்திரியே
மானிடர்க்கு முத்தெறியும் வண்ணமுரைப்போம்
நிறைவாய்த் தவமிருப்போர் நித்தியமும் பூசைசெய்வோர்
நீதிதவ ருதுலக மாளுமரசர்
பரைபாதம் பூசை செய்வோர் பத்தியுடனே துதிப்போர்
பாலகர் விருத்தர் அறம் மேவியிருப்போர்
கரைகாணுச் சைவமறை கற்றுணர்ந்த மேதையர்கள்
கற்பு நெறியிற் தவருப் பத்தினிப் பெண்டிர்
தரைவாயச் சதாசிவத்தைச் சார்ந்து நின்ற ஞானிகட்கும்
தற்பரையே முத்து விளையாடல் தவிர்ப்பாய்
சதிகேடர் துர்ச்சனர்கள் சண்டாளர் பாதகர்மேல்
தாங்கவொண்ணு முத்தையள்ளி ஓங்கியெறிவாய்
பத்தினிமைய யுத்தமரைப் பண்பு கெடப்பேசினர்க்கு
பால் நிறைந்த முத்தையள்ளி வீசியெறிவாய்.''

என்றும் இன்னும் பல கூறியும் தீயவர்களை முத்து எறிந்து வருத்தித் திருந்தும் விதங்களையும் கூறிவிட்டு,

''வாலைபுவனேஸ்வரியே மாரிமுத்து நாயகியே
மாநிலத்தில் முத்துவரம் யாவுமளித்தோம்
பூவுலக மீது சென்று புல்லர்களைச் சங்கரித்து
பூபாரந் தீருமென்று நாதர் மொழிந்தார்.''

இவ்விதம் சிவபெருமான் வரங்கொடுத்தபின் மாரியம்மன் தனது சுவாசத்தினுல் ஒன்பது கோடி சத்திகளை உண்டாக்கி அவற்றுடன் நாடுகளைச் சுற்றிவரத் திட்டமிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் தேவதச்சனை யழைத்து அழகிய தேர் ஒன்று செய்து தரும்படி கேட்க அவனும் செய்து கொடுத்தான். அதில் அவள் ஏறமுன்,

"பொற்கரக நீரெடுத்தாள் பொற்பிரப்பங் கோலெடுத்தாள்
பொன்னனையாள் அம்மனையைக் கையிலெடுத்தாள்
வேப்பிலையைக் கைப்பிடித்தாள் வெண்ணீற்றுப் பையெடுத்தாள்
மெல்லி நல்லாள் கண்டசரமாலை யெடுத்தாள்
ஆர்ப்பரிக்கும் பொன்னுடுக்கை தார்ப்பரியமா யெடுத்தாள்
யாவரும் நடக்க விடைதானருளினாள்"

அப்படி அவள் கூறியவுடனே பரிவாரங்கள் நடந்து சென்றன. அப்பொழுது,

"வாள்பிடித்து சக்திகணம் தோள் கொடுத்துத் தேரிழுக்க
மாரியம்மன் முத்துரத மேறி நடந்தாள்
காவிலிடம் பிடிக்கக் காடேறி தேரிழுக்கக்
கன்னிநல்லாள் தேர்செலுத்தி முன்னே நடந்தாள்
நீலிவடம்பிடிக்க நீலகண்ட தேரிழுக்க
நேரிழையாள் முத்துரத மேறிநடந்தாள்
கலிவடம் பிடிக்க கோமாட்டி தேரிழுக்க
கோதைமுத்துமாரி ரதமேறி நடந்தாள்
வீரர்கணம் பின்நடக்க வீரபத்திரர் முன்நடக்க
மெல்லிழையாள் முத்துரதமேறி நடந்தாள்"

தேவகணங்கள் புடைசூழக் கைலையிலிருந்து தெற்குநோக்கி வருகிற முத்துமாரியம்மன் முதல் முதல் கதிர்வேற் குமரக் கடவுள் வாழும் நகரத்துக்கு வந்தாள்.

"அப்பதியில் வாழுமுயர் அண்டர் முனிவோர்களெல்லாம்
ஆயிழையைக் காணவெதிர் தேடிவருவார்
தமராரும் முத்துக்களைச் சந்தியெங்கும் சிந்திடுவார்
தங்க ரத்ன மாலைகளைத் தொங்கவிடுவார்
செம்பவளக் கால்நிறுத்திச் சித்திரப் பூம்பந்தலிட்டுத்
தேன்கதலி வான்கரும்பு தேடி நிரைப்பார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வம்புசெறி சந்தனக் குழம்புகொண்டு வீசிடுவார்
மாமகர தோரணங்கள் கட்டி நிரைப்பார்
குங்குமத்தினுல் மெழுகிக் குத்துவிளக் கேற்றிடுவார்
கோலவரிப் பட்டுகள் மேற் கட்டிவிடுவார்
செங்கமலப் பூ விறைத்துத் தெண்டனிட்டு முன்வருவார்
தெய்வகன்னி மார்களெதிர் காண வருவார்
நாழிநெல்லுக் கொட்டிடுவார் பூரணகும்பம் நிரைப்பார்
நாரியர்கள் கற்பூரவாலாத்தி யெடுப்பார்.

தாலில்மலர் சிந்திடுவார் ஊழியங்கள் செய்திடுவார்
தாயே சரணமென்று போற்றி செய்குவார்
பாலைகொண்டு வீசிடுவார் பாலாறு மெடுப்பார்
பாதமதில் வீழ்ந்து நமஸ்கார மிடுவார்
பூகமடல் கீறிடுவார் பூவாலலங்கரிப்பார்
பொன்னனையார் மாலைகளைச் சுற்றி யெறிவார்
நாகமணிக் கோவைகளை நாற்றிசையும் கட்டிடுவார்
நாயகியே தஞ்சமென்று பாதம் பிடிப்பார்
வாலகுமரேசர் வந்து மாதாவைத் தெண்டனிட்டு
மாமலர்ப்பாதம் பணிந்து பூசை பண்ணவே
ஞாலமதை யாளுமன்னை பாலனை யுறவணைத்து
நாள்தோறும் வாழ்கவென்று நல்விடைநல்கி''

குமரேசர் வீதிநகரை விட்டகன்று, பின்னர் விட்டுணு வாழ்கிற வைகுந்தம், நாமகள் வாழ்கிற பிரமலோகம், துருவ லோகம், சப்தரிஷிகள் வாழ்கிற உலகம், சனிபகவான், வியாழபகவான், செவ்வாய், சுக்கிரன், புதன் முதலியவர் களுடைய உலகங்கள், நட்சத்திர மண்டலம், சந்திர உலகம், ஈசான உலகம் குபேரன் வருணன், நிருதி, வாயு, அக்கினி என்பவர்கள் வாழ்கிற உலகங்கள், எல்லாவற்றையும் சுற்றி அங்கே வாழ்கிறவர்களால் ஆராதனை செய்யப்பட்டுப் பின் தேவர் உலகத்துக்கு வந்தாள். அங்கே இந்திரனுலும் இந் திராணியாலும் அமரர்களாலும் வழிபடப்பட்டுச் சூரிய உலகம், யமலோகம் முதலியவற்றுக்கு வந்தாள். யமலோகத் திலிருந்து உலகத்துக்கு வரும் வழியிலே, சமுத்திரம் இருந்

தது. அதைக் கடந்து செல்வதற்குக் கப்பலொன்று வேண்டும். உடனே அவள் தேவதச்சனுகிய விசுவகர்மனே அழைத்துக் கப்பல் ஒன்று செய்து தரும்படி கேட்டாள். அவன் வேதம், ஆகமம், புராணம் முதலியவற்றை ஏராகவும், உத்திரங்களாகவும் பலகைகளாகவும் அமைத்துக் கப்பல் செய்து அதிலே நவக்கிரகங்கள், நாள்கள், கோள்கள், அட்டதிக்குப் பாலகர்கள் முதலியவர்களேப் பாய்மரம், பாய்கள், கயிறுகள், கப்பல் தளபாடங்களாகப் பூட்டிக் கப்பல் ஒன்று செய்து முடித்தான்.

(கப்பற் பாட்டு)

"சீரிலங்கு மாதிசத்தி —தச்சன்
செய்தகப்பல் பார்த்துகந்து
தாரிலங்கு தச்சனுக்கு —அம்மன்
தங்கமணிப் பணியளித்து
கூரிலங்கு விழிமடவாள் —அம்மன்
கொடியமுத்து பொதிசுமத்தி
பாரிலங்கு பரிகலங்கள் —யாரும்

பயணம் வர விடைகொடுத்தாள்
விடைகொடுத் தேபயண பேரிகை முழக்கி
வெற்றிமுர சதிரவே விருதுகள் பிடித்து
படைபிடித் தேகோடி பரிகலஞ் சூழப்
பதினெட்டுவகையான முத்துகளு மேற்றி
நடைபிடித் தேபரிதி மாலுமிய தாக
நந்திசுக் கானியாய் வந்து படகேறி
தடையற்ற தண்டையில் இலாசுக ளமைத்துத்
தையல்நல் லாள் கப்பல்பாயெடுத் ததுவே"

"ஏலேயேலோ ஏலேயேலோ, தத்ததெய்ய
ஏலேயேலே ஏலேயேலோ"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய் விரித்துப் பூமியை நோக்கியோடி வந்த கப்பலைக் காசிமாநகருக்கு விடும்படி அம்மன் சொன்னாள். கப்பல் காசி நகரை அடைந்தது. அங்கே இறக்கி மணிகர்ணிகைத் தீர்த்தத்தில் நீராடிக் காசி விசுவநாதரையும் விசாலாட்சி யம்மையையும் பூசித்து வணங்கி விடை கொண்டு மறுபடி யும் சேடிமாருடன் கப்பலேறி மாயாபுரத்துக்கு வந்தாள். அங்கிருந்து முத்துமாரியம்மன் காஞ்சிபுரத்துக்கு வந்து, காஞ்சியிலுள்ள ஏகம்பநாதரையும் காமாட்சியம்மனையும் கண்டு பூசனை புரிந்து வணங்கினாள். பின் கோயிலின் முன் உயரமான தூணொன்றை நிறுவி அதன்மேல் ஏறி ஒருகாலை யூன்றி நின்று ஊண் உறக்கமின்றிப் பலநாள் தவஞ் செய் தாள். ஏகாம்பரநாதர், ''அம்மையே, நீ வேண்டுவது யாது?'' என வினவினார். அதற்கு அவள், ''தேவரீர்! திருக்கைலாசத்திலே அடியாளுக்கு இரண்டு முறை கொடு த்த வரங்களையறிவீர்களே! அவ்வரங்களின்படியே இங்கு தமிழ் நாட்டுக்கு வந்திருக்கிறேன். உலகிலே அளப்பருந் துன்பத்துக்குட்பட்டவளாகிய யான் உலகத்து உயிர்களுக்கு வழிபடு தெய்வமாய் இருக்கவும், அவர்களுள் தீயகுண முள்ளவர்களுடைய குணங்களை முத்தெறிந்து நீக்கி விடவும் நல்லவர்களுக்கு அருள் பொழிந்து வரவும் அருள் பரிபாலிக்க வேண்டும்'' என்று வேண்டினாள். சிவபெருமான்,

> ''கொம்பனாள் பெறத் தெய்வதத் திருவுருக் கொடுத்துக்
> கம்பனார்மலை மகளொடுங் கரந்தருள் செய்தார்
> வம்புவார் சூழ விரேணுகை மடந்தை யப்பொழுதே
> அம்புவிக் கொரு தெய்வ மாயினளம்மா''
>
> (காஞ்சி இரேணு. 33)

சிவபெருமான் வரங் கொடுத்து உமாதேவியாருடன் மறைந்தபின், அம்மையார், தமது காதிலே பாம்புக் குண் டலத்தை யணிந்து, கேடயத்தையும் வாளையும் கைகளிலே ஏந்திக்கொண்டு, பிரமன் முதலிய தெய்வங்கள் புடை சூழ்ந்திருக்கக் காஞ்சிப் பதியிலே தெய்வமாக மாறி வதியலானாள். இதைக் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காதரா வணியினுள் பலகைலாட் கையினுள்
போதரசன் முதற் பலகணம் புடையுற
வேதராசிகள் பயில் விரிபொழிற் காஞ்சியின்
மாதராளாயிடைத் தெய்வமாய் வைகினுள்''

*(காஞ்சி இரேணு. 34)*

என்று காஞ்சிப் புராணம் சிறப்புறக் கூறுகிறது.

அங்கேயிருந்து முத்துமாரியம்மன் வேண்டியவர்களுக்கு அவர்கள் வேண்டியதை அருளிக் கொண்டிருக்கிருள். மேலும் தன்னை வழிபடுமிடங்களிலே எல்லாம் அம்மன் பரிகலங்களுடன் சென்று அருள்மழை செய்து கொண்டிருக்கிருள். அந்த மழை தமிழ் நாடெங்கணும் இலங்கையிலும் விழுகிறது. அதில் மூழ்கி அருள் பெறுகிறவர்கள் பலர்.

குழந்தையில்லாத பெண்கள் அம்மனை வழிபட்டு மக்களைப் பெறுகிருர்கள். வரன் கிடைக்கப் பெருத மடவார் வழிபட்டு நல்ல கணவரைப் பெறுகிருர்கள்.

வைசூரி அம்மை முதலிய நோய்கள் வராதபடி அம்மன் மக்களைக் காப்பாற்றி வருகிருள்.

மாரியம்மனை வழிபட்டு நாமும் அருள் பெறுவோமாக!

S. THILLAINATHAN
Dept. of Tamil
University of Sri Lanka
PERADENIYA.

University of Peradeniya
04 JAN 2022
LIBRARY

704807

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S. Thillainathan

ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம்
நாவலப்பிட்டி.

விலை ரூபா 2-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org